விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
## VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | மாசி 12 திங்கட்கிழமை (24.02.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 67

## திருமலை — குச்சவெளியில்

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்

# கடற்படை அத்துமீறி நுழைந்தது

## எந்நேரமும் தாக்குதல் நடக்கும் அபாயம்

(திருகோணமலை)

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குச்சவெளி திரியாய் வீதியில் ''கள்ளம்பட்ட'' என்னும் இடத்தில் கடற்படையினர் பதுங்கியிருந்து விடுதலைப் புலி உறுப்பினர்களை சுற்றி வளைத்து சரணடையுமாறு கோரிக்கை விடுத்ததை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியிருப்பதுடன் எந் நேரமும் தாக்குதல் நடக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.**

திருகோணமலையில் இருந்து சுமார் 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ள குச்சவெளி திரியாய் வீதியில் ''கள்ளம்பட்ட'' என்னும் இடத்தில் கடற்படையினருக்கும், விடுதலைப் புலிகளும் நேற்று ஒருவரை ஒருவர் சுற்றி வளைத்திருப்பதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை உருவாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இப் பதற்றநிலையை அடுத்து அது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழு தலையிட்டும் விட்டு கொடுக்காத நிலையில் நிலைமை மோசமடைந்துள்ளது

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ''கள்ளம்பட்ட'' என்னும் இடத்தில் கடற்படை பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் அவ் விடத்திற்கு விரைந்தபோது கடற்படையினர் அவர்களை சுற்றி வளைத்து சரணடையுமாறு அறிவித்தனர். அதனை புலிகள் ஏற்க மறுத்த போது அப்பகுதியில் மேலதிகமாக கடற்படையினர் குவிக்கப்பட்டு விடுதலைப் புலிகளை சுற்றி வளைத்துக் கொண்டனர்.

(10ம் பக்கம் பார்க்க)

### ஒப்பந்தத்தை அமுல்படுத்தக் கோரி

## சமாதான நீதிவான்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டம்

(தென்மராட்சி)

புரிந்துணர்வு உடன்படிக்கையை முற்று முழுதாக அமுல் செய்யும் படிகோரி யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம் நேற்றைய தினம் நல்லூரில் உண்ணவிரதப் போராட்டத்தினை நடத்தியது.

இப் போராட்டத்தில் ஆண்கள் பெண்களென நூற்றுக் கணக்கானோர் பங்கு கொண்டிருந்தனர்.

பாலகதிர்காம தேவஸ்தான சிவாச்சாரியார் குமாரக் குருக்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## ஈழமக்கள் ஜனநாயகப் பேரவை அலுவலகத்தில் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத தெருவிலுள்ள ஈ.பி.டி.பி அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற ஈழமக்கள் ஜனநாயகப் பேரவைக் கட்சியின் கைவிடப்பட்ட அலுவலகத்தில இருந்து துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

ரீ-56 ரக துப்பாக்கிகள்-6, எம்-4 ரக கைககுண்டு-1,தொலைத் தொடர்புச் சாதனம்-1, ரீ-56 ரவைகள்-740, நேவிச்சீருடை-1,தொப்பிகள்-2 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை மேற்படி வீட்டை துப்புரவு செய்வதற்காக அங்கு சென்ற ஒருவர் மேற்படி ஆயுதங்களை வீட்டுக் கூரையின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருப்

(10ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் சந்திப்பர்

### 28ந் திகதி கண்காணிப்புக் குழு ஏற்பாடு

(கொழும்பு)

போர் நிறுத்த மீறல்கள் தொடர்பாக எதிர்வரும் 28ந் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருக்கிறது போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு இக் கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.அரச தரப்பில் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையிலான தூதுக் குழுவும் புலிகள் தரப்பில் கிழக்குப் பிராந்தியத் தளபதி கருணா தலைமையிலான தூதுக் குழுவும் சந்தித்துப் பேசவுள்ளன. உரையாடலுக்கு கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டே தலைமைவகிப்பார். குழுவின் புதிய தலைவர் முன்னாள் மேஜர் ஜெனரல் ரி.ரெலிஸ்ஸானும் உடனிருப்பார்.

உடன்படிக்கை மீறல் சம்பவங்கள் பற்றி இருதரப்பில் இருந்தும் ஏராளமான முறைப்பாடுகள் செய்யபபட்டுள்ளன.இவற்றிற்குத் தீர்வு

(10ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யுத்தம் வெடிப்பதை உலக நாடுகள் அனுமதிக்காது

### சுவீடன் தூதுவர் உரை

(திருகோணமலை)

இலங்கையில் மீண்டுமொரு யுத்தம் வெடிப்பதைச் சர்வதேசம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது இவ்வாறு இலங்கைக்கான சுவீ டன் தூதுவர் ஆன்மேரிசலன்ஸ் தெரிவித்தார்.

திருகோணமலையில் வர்த்தக சபையினர் ஏற்பாடு செய்திருந்த சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போதே சுவீடன் தூதுவர் ஆன்மேரி சலன்ஸ் மேற் கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

(10ம் பக்கம் பார்க்க)

## நல்லை ஆதீனத்தில் இன்று சர்வமதப் பிரார்த்தனை

(தென்மராட்சி)

கொழும்பிலுள்ள சர்வமத சமாதான நிதியமும் யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களும் இணைந்து இன்று நல்லை ஆதீன மண்டபத்தில் சமாதானத்திற்கான சர்வமத பிரார்த்தனையை நடத்துகின்றன.


இச் சமாதான சர்வமத பிரார்த்தனையில் பங்குகொள்ளும் பொருட்டு தென்பகுதியில் இருந்து சமார் 100 சர்வமதத் தலைவர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இன்று பிற்பகல் 4மணிக்கு ஆரம்பிக்கப்படும் இப் பிரார்த்தனை மாலை 6மணிக்கு முடித்துவைக்கப்படுமெனத் தெரியவருகின்றது.

அதேசமயம் இங்குவரும் சர்வமதத் தலைவர்கள் இணைந்து நல்லையில் சமாதானத்திற்கான தீபங்களையும் ஏற்றிவைப்பர் என அறியப்படுகிறது. (ந-77,43,7)

## அமைச்சர் மிலிந்த மொறகொட நெடுந்தீவுக்கு நேற்று திடீர் விஜயம்

### கடற்படையை அகற்றுவது குறித்து ஆலோசனை



(நெடுந்தீவு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான உயர் மட்டக் குழுவொன்று நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நெடுந்தீவு சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலை தொடர்பாகவும் அங்கிருந்து கடற்படையை அகற்றுவது தொடர்பாகவும் ஆராய்ந்து சென்றுள்ளது.

நேற்றுக் காலை 2 உலங்கு வானூர்திகளில் பலாலி விமானப் படைத்தளத்தில் வந்திறங்கிய அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினர் படையதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இக் கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, விமானப் படைத்தளபதி டொனால்ட் பெரேரா, கடற்படைத்தளபதி தயா சந்தகிரி

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்








சதமடித்த மகிழ்வில் இந்திய கிரிக்கெற் நட்சத்திரம் டெண்டுல்கர்

# குறைந்த பந்துகளில் சதமடித்து கனேடிய வீரர் புதியசாதனை

உலகக் கிண்ணப் கிரிக்கெற் போட்டி வரலாற்றில் அதிகுறைந்த பந்துகளை எதிர்கொண்டு சதம் பெற்ற பெருமையை கனடாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட்சன் தனதாக்கிக் கொண்டார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நேற்று செஞ்சூரியனில் நடைபெற்ற போட்டியில் 67 பந்துகளில் சதம் ஒன்றைப் பெற்று இவர் சாதனை நிகழ்த்தியுள்ளளார். இதற்கு முன்னர் 1983ம் ஆண்டு உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் இந்திய வீரர் கபில்தேவ் சிம்பாவ்வேக்கு எதிரான போட்டியில் 72 பந்துகளில் சதத்தைப் பெற்றிருந்தார். அதுவே நேற்றுவரை சாதனையாக இருந்தது. எனினும் கபில்தேவ்வின் சாதனையை கனேடிய வீரர் டேவிட்சன் தற்போது முறையடித்துள்ளார்.



இதேவேளை டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத நாட்டைச் சேர்ந்த ஒருவர் உலகக் கிண்ண வரலாற்றில் சாதனையுடன் கூடிய சதத்தினை அடித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 1996ம் ஆண்டு இலங்கைக்கு எதிரான போட்டி ஒன்றில் பாகிஸ்தான் வீரர் அவ்ரிடி 37 பந்துகளில் சதம் ஒன்றைப் பெற்றதே ஒருநாள் போட்டிகளில் ஆகக் குறைந்த பந்துகளில் பெறப்பட்ட சதமாகும்.

CRICKET WORLD CUP 2003

## இன்றைய ஆட்டம்

**சிம்பாப்வே**
**எதிர்**
**அவுஸ்திரேலியா**
(புலவேயோ)
2.00 P.M

**இலங்கை**
**எதிர்**
**கென்யா**
(நெரோபி)
2.00 P.M

# அக்தரின் புதிய சாதனைகள்

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சவைப் அக்தர் இங்கிலாந்திற்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இரண்டு உலக சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் மணித்தியாலத்திற்கு 100.2 மைல் வேகத்தில் பந்தினை வீசியும், பதினொராம் இலக்க வீரராக களமிறங்கி 16பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்றுமே உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

இவ் வேகமான பந்து வீசு கிரிக்கெற் போட்டி ஒன்றில் அதிகூடிய வேகப் பந்தாகும். அத்துடன் 11ம் இலக்க துடுப்பாட்ட வீரராக களமிறங்கி 43 ஓட்டங்களைப் பெற்று 11ம் இலக்க துடுப்பாட்ட வீரர் ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையும் இதுவாகும்.

இதேவேளை 20வருடங்களுக்கு முன்னர் மேற்கிந்தியவீரர் ஜோயல் ஹனெல் இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 11ம் இலக்க வீரராக களமிறங்கி 37 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதுவே நேற்று முன்தினம்வரை ஒருநாள் போட்டி ஒன்றில் 11ம் இலக்க வீரர்பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### இந்தியா எதிர் நமீபியா

**இந்தியா**
50ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 311ஓட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சேவாக் | c கேயுல்டர் | b வூரென் | 24 | (24) |
| டெண்டுல்கர் | b வூரென் | | 152 | (151) |
| கங்குலி | Not out | | 112 | (119) |
| யுவராஜ்சிங் | Not out | | 7 | (7) |

உதிரிகள் - 16

**பந்து வீச்சு -நமீபியா**

| | | | |
|---|---|---|---|
| ஸ்னிமன் | 10 | 57 | 0 |
| வன் வூரென் | 10 | 53 | 2 |
| ஜே. பாக்கர் | 6 | 49 | 0 |
| பி.ஏ.வன்றூய் | 6 | 36 | 0 |
| பி.எல்.ஹோஜ் | 10 | 64 | 0 |
| டி.பி.ஹோஜ் | 8 | 50 | 0 |

**நமீபியா**
42.3 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்வான்னேபில் | lbw | b சகீர்கான் | 9 | (21) |
| ஏ.பக்கர் | | b மொங்கியா | 29 | (30) |
| ஜே.பாக்கர் | lbw | b சகீர்கான் | 0 | (12) |
| கெய்ல்டர் | c மொங்கியா | b ஹர்பஜன்சிங் | 4 | (19) |
| முர்க்காறெயிட் | lbw | b ஹர்பஜன்சிங் | 0 | (6) |
| பி. ஹோஜ் | c&b | b மொங்கியா | 27 | (50) |
| வன்ஸ்கூர் | c ராவிட் | b யுவராஜ் | 24 | (61) |
| பி.ஏ.வன்றூய் | c மொங்கியா | b யுவராஜ் | 17 | (31) |
| எல். ஹோஜ் | c ராவிட் | b யுவராஜ் | 3 | (18) |
| ஸ்னிமன் | c சிறிநாத் | b யுவராஜ் | 5 | (6) |
| வன் வூரென் | Not out | | 0 | (4) |

உதிரிகள் -12

**பந்து வீச்சு -இந்தியா**

| | | | |
|---|---|---|---|
| சிறிநாத் | 6 | 25 | 0 |
| நெக்ரா | 0.1 | 0 | 0 |
| சகீர்கான் | 7.5 | 24 | 2 |
| ஹர்பஜன்சிங் | 10 | 34 | 2 |
| மொங்கியா | 10 | 24 | 2 |
| சேவாக் | 4 | 16 | 0 |
| யுவராஜ்சிங் | 4.3 | 6 | 4 |

# மேற்கிந்திய தீவுகள் அணி கனடாவை வென்றது

உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டித் தொடரில் நேற்றுக் கனடாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா அணி 42.5 ஓவர்களின் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டேவிட்சன் 76 பந்துகளை எதிர்கொண்டு 111 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மேற்கிந்திய வீரர் டிரெக்ஸ் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 20.3 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 206 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் லாரா 73 ஓட்டங்களையும், கைன்ஸ் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக கனேடிய வீரர் டேவிட்சன் தெரிவு செய்யப்பட்டார்.

2003 CRICKET WORLD CUP


இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
**வலம்புரி**
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

**போட்டியில் பங்கு பற்றுங்கள்**
**பெறுமதியான பரிசை வெற்றி**
**கொள்ளுங்கள்**

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.



உங்கள் விடையுடன் தவறாது
இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ------------------------------

முகவரி : ------------------------------
------------------------------

தே.அ.அ.இல : ------------------------------

கையொப்பம்:------------------------------

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# மூன்று ஜனாதிபதிகளால் முடியாததை இன்று பிரதமர் நிதர்சனமாக்கியுள்ளார்

## எஸ்.பி. பெருமித உரை

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நேற்றுடன ஒரு வருடம் பூர்த்தியடைந்து விட்டது.

இந்த ஒரு வருட கால இடைவெளிக்குள் பல துறைகளிலும் வெற்றிகளும், அபிவிருத்தியும் கிடைத்துள்ளன என அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை வானொலி நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பைக் கையேற்கும் போது பொருளாதார மற்றும் சகல துறைகளிலும் நாடு வீழ்ச்சி கண்டிருந்தது.

ஆனால், கடந்த ஒரு வருட காலத்தில் சகல துறைகளிலும் குறிப்பிடக் கூடியளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை சமாதானத்திற்கான அறிகுறிகளாகும்.

ஒரு சில அரசியல் கட்சிகளே இச்சமாதான நடவடிக்கைகளை எதிர்த்துவருகின்றன. அக்கட்சிகளுக்கு தெளிவான அரசியல் தொலைநோக்கு இல்லாமையே சமாதானத்தை எதிர்ப்பதற்கான காரணமாகும்.

கடந்த கால ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்த்தனா, ஆர்.பிரேமதாஸ, சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகியோராலும் சமாதான முயற்சிகள் தொடரப்பட்ட போதும் அவர்களால் அதில் வெற்றி பெறமுடியவில்லை.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தொடரப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் ஒரு வருடமாக நிலைத்து நிற்கின்றன என்றார். (உ-8)

# இந்திய மீனவரின் அத்துமீறல் குறித்து

## ஜப்பானியக் குழுவிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த ஐந்து பேர் கொண்ட ஜப்பான் குழு, கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளை சந்தித்து கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடியது.

இதன்போது, மீனவப் பிரதிநிதிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

மீன்கள் கொண்டு செல்வதற்கான குளிரூட்டப்பட்ட வாகன வசதிகள இல்லாமை, யாழ்ப்பாணத்தில் ஐஸ் தொழிற்சாலை அமைத்தல், சந்தைப்படுத்தும் நிலையங்கள் அமைத்தல் மற்றும் இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுதல் என்பன குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. மீனவர்கள் இப்போதும் பழைய மீன்பிடி முறைகளையே கையாள்வதால் இனி வரும் காலங்களிலாவது நவீன முறைகளைக கையாள வழிவகை செய்யப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டது. (உ-7)

# நெடுந்தீவுச் சம்பவம் குறித்து

# இலங்கை — இந்திய கடற்படை

# அதிகாரிகள் ஆராயவுள்ளனராம்

(கொழும்பு)

இலங்கைக்கும்-இந்தியாவிற்கும் இடையில் கடற்படைத் தொடர்புகளை பலப்படுத்துவது பற்றியும் கூட்டுக் கடற்படைப் பயிற்சிகளை நடத்துவது பற்றியும் ஆராய இலங்கை கடற்படை உயர் அதிகாரிகள் குழு இந்தியாவிற்குச் சென்றுள்ளது.

இவ்வாறு கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் ஜயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை பற்றி மேலும் கருத்து வெளியிட்ட கப்டன் ஜயந்த பெரேரா,

இரு நாடுகளிற்கும் இடையிலான கடற்படைத் தொடர்புகளைப் பலப்படுத்துவது பற்றியும், கூட்டுக் கடற்படைப் பயிற்சிகள் பற்றியும் இவர்கள் இந்திய அதிகாரிகளுடன் ஆராய்வார்கள்.

அத்துடன், இம்மாதம் 7 ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று வெடித்துச் சிதறியமை பற்றியும்,

இந்திய இழுவைப்படகுகள் கடல் எல்லைகளை மீறுவது பற்றியும் இந்திய அதிகாரிகளுடன் இலங்கை கடற்படையினர் பேச்சு நடத்துவர்.

இதேவேளை, இலங்கை கடற்படை நடவடிக்கைப் பணிப்பாளரான றியாட் அட்மிரல் சரத் வீரசேகராவும் இந்தியா சென்றுள்ள குழுவில் அடங்குவது குறிப்பிடத்தக்கது. (உ-10)



யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் அவ்வப் பாடசாலை மைதானங்களில் நடைபெற்ற போது, பாண்ட் வாத்திய இசைக் குழு அணிவகுத்துச் செல்கையில் எடுக்கப்பட்ட படங்கள். படங்கள் : க.பவன்

### திறந்த பல்கலையின் பிரச்சினைகள் கேட்டறிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை கண்டறிவதற்காக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அண்மையில் அங்கு விஜயம் செய்திருந்தார்.

பிராந்திய நிலைய இயக்குநர் ஆ.ஞானேந்திரன் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்களைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை மாவை கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது விரிவுரையாளர்கள் பற்றாக்குறை போன்ற விடயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. (உ-7)

# செய்தித்துளிகள்

### தொலைபேசி சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்கள் பாவனைக்காக மேலும் ஒரு தொலைபேசிச் சேவையை ஆரம்பித்துள்ளது.

அத்துடன், நெடுந்தீவு மேற்குப் பகுதி மக்களுக்காக அங்கு தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றினை ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதாகவும் சங்கத்தின் தலைவர் க.கோபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-117)

### சிறான் கூட்டம் திருகோணமலையில்

(கொழும்பு)

அவசர உபகுழுவின் புனர்வாழ்வு, புனரமைப்பு (சிறான்) கூட்டம் வரும் 27ம், 28ந் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

சமாதான செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக தலைமையில் அரசதரப்புக் குழுவினரும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கூட்டத்தில் அடுத்த மாதம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் பரிசீலிக் கப்படவுள்ளன.

சிறானின் அடுத்த மாதக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. (த)

### நடமாடும் காப்புறுதிச் சேவை

(யாழ்ப்பாணம்)

''ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை அனைத்து வாகன உரிமையாளர்களுக்குமான மோட்டார் வாகன காப்புறுதி பத்திரத்தினை வழங்கவுள்ளது.

வாகன உரிமையாளர்களை தகுந்த ஆவணங்களுடன் இதற்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### பனம் பொருள் கைப்பணி நிலையம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் பனம் பொருள்கைப்பணி நிலையம் ஒன்று மானிப்பாய் புதுமடத்தில் விரைவில் ஆரம்பிக் கப்படவுள்ளது.

இந்நிலையத்திற்கு வேண்டிய பயிற்சியாளர்களை கியூடெக் நிறுவனம் தெரிவு செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### மின்விளக்கு ஒளியிழந்தது

(கரணவாய்)

நெல்லியடி பஸ்நிலையப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள பிரதான மின்விளக்கு பல வார காலமாக ஒளியிழந்து காணப்படுவதால், இரவு வேளைகளில் பிரயாணிகள் பல அசௌகரியங்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. (உ-29)

### விபத்தில் கால்முறிவு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் காலை திருநெல்வேலி தபால்கட்டைச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் வந்தவரான அரியாலையைச் சேர்ந்த எஸ்.தர்மகுலராசா (வயது 40) என்பவர் இடது கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-7)

### கசிப்பு கைப்பற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் யாழ். பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

இதன் போது அவரிடம் இருந்து 49 போத்தல் கசிப்பை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (உ-7)

### விண்கல்லை நாஸாவுக்கு அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

கண்டி பேராதனைப் பகுதியில் அண்மையில் விழுந்த விண்கல் மேலதிக பரிசோதனைக்காக அமெரிக்காவிலுள்ள நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

கடந்த புதனன்று இரவு வீழ்ந்த இக்கல் 5 கிலோ முதல் 8 கிலோகிராம் வரையிலான எடை கொண்டது.

இந்தக் கல் நிச்சயமாக விண்கல்லின் ஒரு பகுதிதான் என பேராதனைப் பல்கலைக்கழக பூகோளவியல் பிரிவுத் தலைவர் கலாநிதி அதுலசேனாரத்ன தெரிவித்துள்ளார். (உ)

### பாலம் சேதம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை 4 ஆம் குறுக்கில் உள்ள பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதால் போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (உ-51)

### வீதி சேதம்

(தனங்கிளப்பு)

நாவற்குழிச் சந்தியில் இருந்து கோயிலாக்கண்டிச் சந்தி வரையான வீதியில் பாரிய குழிகள் காணப்படுகின்றதால், பொது மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமப்படுகின்றனர். (உ-37)

### சிவராத்திரி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரி தினமான எதிர் வரும் முதலாம் திகதி சனிக்கிழமை யா/கொட்டடி சனசமூக நிலையத்தில் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. (உ)

* * * *

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை திருநெல்வேலி சிவன் கோவிலில் மகா சிவராத்திரி விழா கொண்டாடப்படவுள்ளது.

அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்திராக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10)

### கருத்தரங்குகள்

(கல்வயல்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தினால் கடந்த ஞாயிறன்று காலை 9 மணி முதல் பி.ப. 4 மணிவரை புத்தூர்ச் சந்தியில் அமைந்துள்ள தென்மராட்சி கமநல சேவை நிலையத்தில் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டது. (உ-36)

* * * *

(தனங்கிளப்பு)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன ஏற்பாட்டில் கடந்த திங்களன்று யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-37)

### மட்டு-அம்பாறையில் பூரண ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு வருடத்தை நிறைவு செய்கின்ற போதும், உடன்படிக்கை சரிவர நிறைவேற்றப்படாததைக் கண்டித்தும், இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படாமைக்கு அதிருப்தி வெளியிட்டும் அம்பாறை-மட்டக்களப்பு மாவட்டங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஹர்த்தால் கதவடைப்புப் போராட்டங்களினால் அம்மாவட்டங்களின் வழமையான செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித்தது. (இ)

# ஐ.நா மூலமே ஈராக் பிரச்சினைக்கு அமெரிக்கா தீர்வு காணவேண்டும்

## கோலாலம்பூர் செல்லும் வழியில் இந்தியப் பிரதமர் கருத்து

(கோலாலம்பூர்)

ஈராக் மீதான போரைத் தவிர்க்க வேண்டும் என்றும் இப் பிரச்சினையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலமே அமெரிக்கா தீர்வு காண வேண்டும் என்றும் இந்தியப்பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

114 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அணிசேரா இயக்கத்தின் உச்சி மாநாடு மலேசியத் தலைநகர் கோலாலாம்பூரில் இன்று தொடங்குகிறது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக டெல்லியில் இருந்து விமானப் படை தனி விமானம் மூலம் கோலாலம்பூர் சென்றடைந்த பிரதமர் வாஜ்பாய்க்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமானத்தில் வரும் போது பிரதமர் வாஜ்பாய் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,


ஈராக் மீதான போர் தவிர்க்கப்பட வேண்டும். ஈராக் நெருக்கடிக்கு ஐ.நா பாதுகாப்புச்சபை மூலமே தீர்வு காண வேண்டும். ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலமாக ஈராக் பிரச்சினைக்கு அமெரிக்கா தீர்வு காண வேண்டும் என்பதை அணிசேரா நாடுகள் வற்புறுத்த வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

அணிசேரா நாடுகள் மாநாட்டின் போது பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்புடன் கை குலுக்குவீர்களா? என்று நிருபர்கள் கேட்டதற்கு, நாங்கள் இருவரும் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. என்று பேச்சைத் திசை திருப்பினார்.

முஷாரப்புடன் எதுவும் பேசமாட்டீர்களா? என்று கேட்டதற்கு அவர்கள் (பாகிஸ்தான்) முதலில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்தட்டும். அதன் பிறகு நான் பதில் சொல்கிறேன் என்றார் பிரதமர் வாஜ்பாய்.

வாஜ்பாயும், முஷாரப்பும் சந்தித்துப் பேசுவார்கள் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது பற்றிக் கேட்டதற்கு நம்முடைய நிலை என்ன என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். நம்முடைய நிலை குறித்து நமது நட்பு நாடுகளுக்கு நாம் நன்றாகவே எடுத்துக் கூறி விட்டோம் என்று வாஜ்பாய் கூறினார்.

அணிசேரா இயக்கத்தின் எதிர்காலம் பற்றிக் கேட்டதற்கு அணிசேரா இயக்கத்தை மேலும் பலப்படுத்த வேண்டும். பலநோக்கு உலக ஆணை ஒன்றை உருவாக்க இந்த அமைப்பு பாடுபட வேண்டும் என்று வாஜ்பாய் கூறினார். (பி)



### சீனாவிலும் தற்கொலைக் குண்டுதாரி

(பீஜிங்)

கிழக்குச் சீனாவில் ரயில் நிலையத்தில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டு ஒன்றினை வெடிக்கச்செய்ததில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

யூ நகரிலுள்ள ரயில் நிலையத்துக்குள் உட்பிரவேசித்த இனந் தெரியாத நபர் உடலில் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்கச் செய்துள்ளார்.

இந்த சம்பவத்தின் போது மேலும் 2 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். என்றும் அவர்களின் நிலை கவலைக் கிடமாகவுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (பி-9)

WORLD NEWS உலக தரிசனம்




அமெரிக்காவில் உள்ள இரவு விடுதி ஒன்றில், கலை நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும் போது திடீரென பற்றிய தீ விபத்தில் 96 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீ விபத்து குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது எடுக்கப்பட்ட படம்.

## தமிழ் சாத்தான் குளம் தேர்தல்

# இன்று பிரசாரம் ஓய்வு 26ஆம் திகதி வாக்கெடுப்பு

(மதுரை)

சாத்தான்குளம் சட்டமன்ற தொகுதியில் இன்று பிரசாரம் முடிவுக்கு வருகிறது. 26 ஆம் திகதி வாக்குப் பதிவு நடக்கிறது.

சாத்தான் குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த மணி நாடார் மறைந்ததையடுத்து அங்கு இடைத் தேர்தல்நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து தேர்தல்கமிஷன் தேதியை அறிவிக்க அங்குதேர்தல் தேர்தல் பணிகள்தொடங்கின.

அ.தி.மு.க. வேட்பாளராக லகேவர்ணமும், காங்கிரஸ் வேட்பாளராக வழக்கறிஞர் மகேந்திரனும் போட்டியிடுகிறார்கள். மற்ற எந்தக் கட்சியும் இங்கு போட்டியிடவில்லை. தொடர்ந்து தோல்வியையே தழுவி வந்த தி.மு.க. இத்தேர்தலில் தோல்வி பயம் காரணமாக ஒதுங்கிக் கொண்டது. ம.தி.மு.கவும் ஒதுங்கிக் கொண்டது.

இத்தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் லகே வர்ணத்தை ஆதரித்து அதி.மு.க. பொதுச் செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா 5நாட்கள் சூறாவளி பிரசாரம் செய்தார். படுக்கப்பத்து கிராமம் முதல் கண்டு கொண்டான் மாணிக்கம், நெடுங்குளம் கிராமங்கள் வரையில் அவர் 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரசாரம் செய்தார். சென்ற இடம் எல்லாம் அவரை காண மக்கள் வெள்ளம் அலைகடலென திரண்டது. பிரசாரத்தின் போது மதமாற்றத் தடைச்சட்டம் குறித்து முதல்வர் ஜெயலலிதா மக்களிடம் விளக்கி கூறினார். தாமாக முன்வந்து யாரும் மதம் மாறலாம். அதில்அரசு தலையிடாது எனஅவர் உறுதியளித்தார். இதில் துஷ்பிரயோகம் இருக்காது என்பதையும் அவர் தெளிவு படுத்தினார். இதைப் புரிந்து கொண்டதும் கிறிஸ்தவப் பாதிரியார்கள் அணி திரண்டு முதல்வரை நேரில் சந்தித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

சாத்தான்குளம் தொகுதியில் மகளிர் கல்லூரி அல்லது பாலிடெக்னிக் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். சிமிண் ஆலை நிறுவுவது பற்றி ஆராயப்படும். விளையாட்டு மையம் அமைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா உறுதியளித்துள்ளார். நேற்றுடன் அவர் தனது பிரசாரத்தைத முடித்துக் கொண்டார். முதல்வரின் பிரசாரத்தையடுத்து அங்கு அ.தி.மு.க. வெற்றி உறுதியாகிவிட்டது. காங். வேட்பாளர் பிரசாரம் செய்கிறாரா? என்பதே தெரியவில்லை. இதனிடையே கடந்த 2வாரம் நடைபெற்ற அனல் பறக்கும் பிரசாரம் இன்று மாலை 5மணியுடன் முடிவுக்கு வருகின்றது. வாக்குப்பதிவு 26 ஆம் திகதி காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 5 மணிவரை நடக்கிறது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (பி)

# சினிமா விளம்பரங்களில் புகைப்பதைக் காட்டாதீர்

## உலக சுகா. ஸ்தாபனம் கோரிக்கை

(ஜெனிவா)

புகைப்பிடிப்பதை ஒரு மகிழ்வூட்டும் கவர்ச்சிப் பாஷனாக வெளிப்படுத்துவதை நிறுத்திவிடும் படி ஹாலிவூட் படத் தயாரிப்பாளர்களையும் ஏனைய பாஷன் பொருள் தயாரிப்பாளர்களையும் உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O) கேட்டுக் கொண்டுள்ளது.

புகைப்பிடித்துலுக்கெதிராக உலகளாவிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்த ஐ.நா முகவர் ஸ்தாபனம் படத்தயாரிப்பாளர்கள் புகைப்பிடிப்பதை வரவேற்கக்கூடியதான முறையில் காட்டுவதையும் பாஷன் பொருள் தயாரிப்பாளர்கள் சிகரட்டை ஒரு பாஷன் பொருளாக பயன்படுத்துவதையும் நிறுத்தி விடும் படியும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சிகரட் புகைப்பவர்கள் இருக்கும் இடங்களால் 17 வயதுக்குக் குறைவானவர்கள் இருந்து படம் பார்ப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும் திரைகளில் சிகரட் வகைகள் காட்டப்படக் கூடாதென்றும் சினிமா தியேட்டர்களில் புகைப்பதைத் தடுக்கும் கடுமையான விளம்பரங்கள் காட்டப்படவேண்டும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

புகைத்தல் தொடர்பான நோய்களால் வருடத்தில் 5 லட்சம் பேர் இறக்கிறார்கள் என்றும் அடுத்த 20 ஆண்டு காலத்தில் இந்த எண்ணிக்கை இரு மடங்காகலாம் என்றும் உலக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். எதிர்காலத்தில் புகைப்பதனால் நோய்களுக்குள்ளனவர்களில் 70 வீதத்தினர் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள் என்றும் கருதுகிறார்கள். (பி)

### ஆற்றில் பேருந்து வீழ்ந்து 14பேர்பலி

(ஏதென்ஸ்)

கிறிஸின் வடபகுதியில் பாலம் ஒன்றில பேருந்து விழுந்ததில அதில் பயணம் செய்து கொண்டிருந்த சுமார் 14 பயணிகள் கொல்லப்பட்டனர்.

ஆற்றிலிருந்து 2 குழந்தைகள் உட்பட 14பயணிகளின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பாலம் ஒன்றினூடாகச் செல்லும் போது, பாலத்தையும் உடைத்துச் கொண்டு பேருந்து ஆற்றில் வீழ்ந்துள்ளது.(பி-9)

### ஆயுதக் களைவுக்கு காலக்கெடு

(வாஷிங்டன்)

அடுத்த மாதம் முதல் தேதிக்குள் ஈராக் தனது ஏவுகணைகளை அழித்தொழிக்க வேண்டும் என்று ஐ.நா.தலைமை ஆயுத ஆய்வாளர் திரு. ஹான்ஸ் பிளிக்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே ஈராக் ஆயுதக்களைவு குறித்த புதிய தீர்மானம் ஒன்றை அமெரிக்கா அடுத்தவார முற்பகுதியில் ஐ.நாவிடம் சமர்ப்பிக்கும் என்று அமெரிக்க அதிபர் திரு.ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியிருக்கின்றார்.

ஆயுதக் களைவுக்கான உத்தரவுகளை சதாம்ஹுசைன் கடைப் பிடிக்கவில்லை என்பது தனது தெளிவான கருத்து என்று அவர் கூறியிருக்கிறார்.

1441 என்ற தனது முந்திய தீர்மானத்தில் கூறியவற்றை தொடர்ந்து வற்புறுத்துவதாக காட்டுவதற்கு ஐநா.சபைக்கு இது ஒரு கடைசி வாய்ப்பு என்றும் கூறியிருக்கிறார். (பி-9)

விலை அதிகரிப்பை தவிர்க்க

# எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க தீர்மானம்

(கெய்ரோ)

ஈராக்கில் யுத்தம் ஏற்பட்டால் உலக சந்தையில் எண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் அதன் உற்பத்தி அளவை அதிகரிக்கும் என்று பெற்றோலியப் பொருட்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் அல்வாரோ சில்வா தெரிவித்துள்ளார்.

ஈராக் தற்போது நாளாந்தம் 2 மில்லியன் பீப்பா எண்ணெய்யை ஏற்றுமதி செய்கின்றது.

உலகின் 8வது பாரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான ஈராக்கில் இந்த ஏற்றுமதி தடைப்பட்டால் ஒபெக் நாடுகள் தமது உற்பத்தி அளவை அதிகரித்து அதனை ஈடுசெய்யும் என்று அவர் கூறினார்.

உலகின் 5வது பாரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான வெனிசுலா நாளாந்தம் 2.7 மில்லியன் பீப்பா எண்ணெயை ஏற்றுமதி செய்தது.

எனினும் சில மாதங்களிற்கு முன்னர் அங்கு இடம்பெற்ற வேலை நிறுத்தத்தால் எண்ணெய் ஏற்றுமதி பாதிக்கப்பட்டது.

அதனை ஈடுசெய்ய ஒபெக் நாடுகள் எண்ணெய் உற்பத்தியை இவ்வருடத்தில் இரண்டு முறை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (பி-9)

# வழிபாட்டுத் தலத்தில் துப்பாக்கிச் சூடு

## 8பேர் படுகொலை

(பக்தாத்)

பாகிஸ்தான் கராச்சி நகரத்திலுள்ள ஷியாப் பிரிவினரது வழிபாட்டுத் தலத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 8பேர் கொல்லப்பட்டதோடு 10பேர் படுகாயமடைந்தார்கள்.

அடையாளம்தெரியாத சிலர் மோட்டார் வாகனத்தில் சென்றது வழிபாட்டில் ஈடுபட்டிருந்தோர் மீது நேற்று முன்தினம் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள்.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 20வயதிற்கு உட்பட்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் ஷியாப்பிரிவு சன்னி பிரிவு முஸ்லிம்களிற்கிடையில் அடிக்கடி நடைபெற்று வரும் இத்தகைய தாக்குதல்களில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (பி-9)



சென்னையில் இருந்து பாண்டிச்சேரி சென்ற பின் அங்கிருந்து திருப்பூர் சென்ற. இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், அங்கு பள்ளி மாணவ, மாணவிகளுடனான நிகழ்ச்சி ஒன்றில் பள்ளி சிறுமி ஒருத்தியுடன் உரையாடிய போது எடுத்த படம்.

# மத்திய கிழக்கிற்குச் சென்ற 500 இலங்கைப் பெண்கள் நிர்க்கதி நிலையில்

(கொழும்பு)

குவைத் நாட்டுக்கு பணிபுரியச் சென்ற சுமார் 500 இலங்கைப் பெண்கள் நிர்க்கதியான நிலையில் அந்நாட்டு இலங்கைக்கான தூதுவராலய முகாமில் தங்கி உள்ளனர்.

வெளிநாட்டுச் சேவைகள் சேமநலத்துறை அமைச்சர் லஷ்மன யாப்ப அபயவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, ஜோர்தான், குவைத் ஆகிய நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாடு திரும்பிய பின்னர் லஷ்மன் யாப்ப அபயவர்த்தன இது குறித்து மேலும் கருத்து வெளியிடுகையில்,

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிவதற்காகச் செல்லும் பெண்களில பெரும்பாலானோர், எஜமானர்களின் துன்புறுத்தல்களுக்கும், பாலியல் இம்சைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் இவ்வருட இறுதிக்குள் அழைத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் எண்ணெய் வளம்

## அமைச்சர் கரு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையைச் சூழவுள்ள கடற்பிரதேசங்களில் எண்ணெய் வளம் இருப்பது பற்றி இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளதாக மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கருஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

125 மில்லியன் ரூபா செலவில் பந்துலஸநகர தேர்தல் தொகுதியில மின்சாரத்திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே அமைச்சர் கருஜெயசூரியா இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இவ் எண்ணெய் வளத்தை இலங்கை அரசு உரிய முறையில் பயன்படுத்துமானால் நாட்டில் பெரும் முன்னேற்றத்தையும், வெற்றியையும் காணலாம் என்றார். (உ-10)

# பழுதடைந்த பேருந்தை திருத்துவதில் அசமந்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து பழுதடைந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் திருத்துவதற்கான எந்த வேலை களும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால், இப்பகுதி நோயாளர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும குறித்தநேரத்திற்கு உரிய இடங்களிற்குச் செல்ல முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# நல்லூரில் இன்று சமாதான தீபமேற்றல்

(ஈச்சமோட்டை)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பினர் இன்று-யாழ்.வரவுள்ளனர்.

100 பௌத்த துறவிகள் உள்ளிட்ட கிறிஸ்தவ குருமார், இந்துகுருமார், இஸ்லாமிய மௌலவிமார்கள் 400 பேர் இவ்விதம் யாழ்.வரவுள்ளனர்.

யாழ். வரும் இக்குழுவினருக்கு கைதடியில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் வரவேற்பும் மதிய உணவும் வழங்கப்படவுள்ளது.

இக்குழுவினர் மாலை நல்லூர் ஆதீனத்தில் ஒன்று கூடி தியானத்தில ஈடுபடவுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒருவருடமாக பேணப்பட்டுவருவதை பாராட்டியும், தொடர்ந்து இது பேணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், சமாதானமுயற்சி வெற்றி பெறவேண்டும் என்பதற்குமாகவே இப்பயணத்தை தாம் மேற்கொள்வதாக மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-59)

# மென்பந்தாட்டப் போட்டி வவு. அணி வெற்றிவாகை

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவின் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் திருமலை, கிளிநொச்சி அணிகளுக்கிடையில் நடைபெற்ற மென்பந்துப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருமலை அணி, 15 ஓவர் முடிவில் 5 விக்கெற்றுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி அணி 8 விக்கெற் இழப்பிற்கு 57 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது.

முல்லை, வவுனியா அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் முல்லைத்தீவு அணி 13 ஓவரில் சகல விக்கெட்டையும இழந்து 54 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வவுனியா அணி 12 ஓவரில்3 விக்கெற்றை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதேவேளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாண அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மட்டு அணி 1:0 என்ற கோல் கணக்கிலும், வவுனியா, அம்பாறை அணிகளுக்கிடையி லான போட்டியில் வவுனியா அணி 2 :1 என்ற கோல் கணக்கிலும் வெற்றியீட்டின.

யாழ், முல்லை அணிகளுக்கிடையில நடைபெற்ற காற்பந்தாட்டப் போட்டியில் யாழ் அணியும், திருமலை, மன்னார் அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 35:16 என்ற கோல்கணக்கில மன்னார் அணியும் வெற்றியீட்டின. (த)

# விபத்தில் காயம்

(தனங்கிளப்பு)

கைதடி-கண்டி வீதியில் அண்மையில் இடம்பெற்ற ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த கைதடி ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளரான ச.சற்குணநாதன் வயது(55), தனங்கிளப்பைச் சேர்ந்த தி. ஜீவகதாஸ் வயது (23) ஆகியோரே காயமடைந்துள்ளனர். (உ-37)

* * *

(நவக்கிரி)

மோட்டார்சைக்கிள் - பிக்கப் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவரான மீன் வியாபாரி படுகாயமடைந்தார்.

அண்மையில் நவக்கிரி இராஜ வீதிப பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மயிலிட்டியைச சேர்ந்த த. சந்திரசேகரம் (வயது 45) என்பவரே படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-233)

# பாராளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

தூக்குத் தண்டனையை மீண்டும் அமுல் படுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தி சகல தரப்புகளினதும் கருத்துக்கள் பெறப்படவுள்ளன.

இந்த வகையில், இது குறித்த ஒத்திவைப்பு நேர விவாதம் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. (உ)

# புதிய தலைவர்

(கரணவாய்)

நெல்லியடி வர்த்தக சங்கத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் வடமராட்சி மத்திய மகளிர்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது தலைவராக இரா. பாலச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டார். (உ-29)

# புதிய நிர்வாகத் தெரிவு

(தனங்கிளப்பு)

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியின் புதிய நிர்வாக சபை தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தலைவராக யோ. இந்திரபாலனும் செயலாளராக த.பகீரதனும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-31)

# சுப்பிரமணியம் பூங்கா புனரமைப்பு

(குருநகர்)

யாழ். சுப்பிரமணியம் பூங்கா மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது..

இந்த வகையில் தற்போது அப்பகுதியில் இருக்கும் புல் பூண்டுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மேற்படி பூங்கா புனரமைப்புப் பணிகள் ஏற்கனவே பல தடவைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் பின்னர் இடைநிறுத்தப்பட்டமை தெரிந்ததே. (உ-74)

# "தூறல்" வெளிவந்தது

(கொழும்புத்துறை)

யாழ. திருமறைக் கலாமன்றத்தின மாதாந்த செய்தி இதழான "தூறல்" வெளிவந்துள்ளது.

ஊடகப் பிரிவின் வெளியீடான இவ் இதழ் மேற்படி மன்றத்தின் செயற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளுதல் ,அங்கத்தவர், ஆதரவாளர்களுடனான உறவினை பலப்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு வெளிவருகின்று (உ-51)

# பத்திரிகைகள் முறைப்பாட்டு ஆணைக்குழு

(கொழும்பு)

"பத்திரிகைகள் முறைப்பாட்டு ஆணைக்குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திப் பத்திரிகைகள சங்கம், பத்திரிகை ஆசிரியர் கழகம், சுதந்திர ஊடக இயக்கம் என்பன இணைந்து இந்த ஆணைக்குழுவை அமைத்துள்ளன.

இநத ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகமும், முன்னாள் ஆராட்சி அதிகாரியுமான ஷாம் விஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (உ-8)

# மீளக்குடியமர்ந்தவர்களின் விபரங்கள் திரட்டுவதில் காரை. கடற்படையினர்

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் ஏ-9 பாதையினூடாக மீளக்குடியமர்ந்தவர்களின் பெயர் விபரங்களை கடற்படையினர் திரட்டிவருகின்றனர்.

இந்த வகையில் ஏ-9 பாதையினூடாக மீளக்குடியமர்ந்தவர்களின் முழுப்பெயர், தற்போது தங்கியிருக்கும் விலாசம், அடையாள அட்டை இலக்கம், மீளக்குடியமர முன் தங்கியிருந்த விலாசம் உட்பட குடும்ப அங்கத்தவர்களின் விபரங்களை கிராம சேவையாளர்களை சமர்ப்பிக்குமாறு கடற்படையினர் கோரியுள்ளனர்.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் கடற்படையினர் இவ்வாறு தகவல்கள் சேகரிப்பது தொடர்பாக பொதுமக்கள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (உ-246)

# பழையவீட்டை இடித்த கட்டடத் தொழிலாளி மேல் தூண் வீழ்ந்ததில் நசுங்கிப் பலி

(யாழ்ப்பாணம்)

பழைய வீடொன்றை இடித்துக் கொண்டிருந்த கட்டடத் தொழிலாளி, தூண்சரிந்து வீழுந்ததில் நசுங்கிப பலியானார்.

இந்தப் பரிதாபச் சம்பவம் கடந்த சனியன்று வடலியடைப்புப் பகுதியில இடம்பெற்றுள்ளது.

கட்டடத்தொழிலாளியான பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த நு. ஆனந்தராசா (வயது 31) என்பவரே தூண் வீழ்ந்து நசிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சமயம் மரணமானவராவார். (உ-7)

# 20 வருட யுத்தத்தால் 2,214 பொலிஸார் பலி

(கொழும்பு)

கடந்த 20 வருடகால யுத்தத்தில 2 ஆயிரத்து 214 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரிண்டன் வியன்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. இக்காலபபகுதியில் 7 ஆயிரத்து 472 பொது மக்களும் இராணுவத்திற்கு தகவல் கொடுத்தார்கள் என்ற பேரில் 214 பேரும் கொலை செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

# தமிழகத்திலிருந்து 43 அகதிகள் மன்னார் வந்து சேர்ந்தனர்

(மன்னார்)

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் இருந்து 43 தமிழ் அகதிகள நேற்று முன்தினம் அனுமதியற்ற படகு ஒன்றின் மூலம் மன்னார் வந்து சேர்ந்துள்ளனர்.

மண்டபம் அகதிமுகாம் நிர்வாகிகளுக்குத் தெரியாமல் மன்னார் வந்து சேர்ந்துள்ள 43 பேரில் 22 பெண்களும் 12 ஆண்களும் 9 குழந்தைகளும் அடங்குவர்.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், குருநகர், சில்லாலை, பண்டத்தரிப்பு மற்றும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இன்னுமொரு படகில் வந்த 13 பேர்கள் மன்னாரில் கரை ஒதுங்கியபோது அவர்கள் வவுனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# சிறுதானியப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு

(காரைநகர்)

காரைநகர்ப் பகுதியில் இம்முறை சிறுதானிய பயிர்ச் செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு தீவகம் வடக்கு பிரதேச செயலர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் அப்பகுதி விவசாய சம்மேளனம், பயிர்பாதுகாப்பு குழு மற்றும் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களைக் கேட்டுள் ளார்.

இம்முறை சிறுதானிய பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கூடியதாக போதுமான ஈரலிப்புத் தன்மையான சாதகமான சூழல் அமைந்துள்ளதால் இதனைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரதானமாக கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (உ-246)

# தென்னை மீள் நடுகைத் திட்டம் மார்ச்சில் ஆரம்பம்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள நகர்சபைகள், பிரதேசசபை பிரிவுகள ரீதியாக தென்னை மீள்நடுகைத்திட்டம் எதிர்வரும் மார்ச்மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ் மாவட்டத் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக யாழ்.மாவட்டத்தில் பெருமளவு தென்னை மரங்கள் அழிவடைந்துவிட்டதையடுத்து, இதனை ஓரளவுக்காவது ஈடுசெய்யும் நோக்குடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டங்கள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவும் நடத்தப்படவுள்ளன. (உ-252)

# சமாதான முயற்சிகளுக்கு இடையூறாகவுள்ள முட்டுக்கட்டைகள் களையப்பட வேண்டும்

## நோர்வேத் தூதர் வெஸ்பேர்க் வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவிவரும்



சமாதான சூழலுக்கு இலங்கை மக்கள் அனைவரும், தமது ஆதரவையும் அர்ப்பணிப்பையும் தொடர்ந்தும் வழங்கிவர வேண்டும் என்றும்,

அத்துடன், நாட்டின் நிரந்தர சமாதானத்திற்கான முட்டுக்கட்டைகள் களையப்பட வேண்டும் என்றும்,

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன வெஸ்பேர்க் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில நேற்று முன்தினம் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒருவருட பூர்த்தியையொட்டி நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே ஜோன் வெஸ்பேர்க் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சும், தேசிய சமாதானப் பேரவையும், இளைஞர் சேவை மன்றமும இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சியில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையின் இனப்பிரச்சினைத தீர்வு சம்பந்தமாக வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு நோர்வே எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளுக்கு சமாதான ஏற்பாட்டாளராக நோர்வே செயற்படுவதை பெரும் பாக்கியமாக நோர்வே கருதுகிறது என்று தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் புனர்வாழ்வு அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனாவும் உரையாற்றினார். (வ)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/கொழும்புத்துறை சென்ஜோசப வித்தியாலய வரடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அதிபா எம். ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்தந்தை எம். யேசுரட்ணமும் சிறப்பு விருந்தினராக இளைஞர் ஆணைக்குழு இயக்குநர் சாள்ஸ் கொலின்ஸ்ம் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-51)




நேற்று நல்லூர் ஆலய வடக்கு வீதியில் யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தினால் நேற்று நடத்தப்பட்ட உண்ணாவிரதப்போராட்டத்தின்போது பிடிக்கப்பட்ட படங்கள்
படங்கள் : பவன்

# மீளக்குடியமரும் முஸ்லிம்களுக்கு கொடுப்பனவு வழங்க வேண்டும்

## புத்தளம் கூட்டத்தில் தீர்மானம்

(புத்தளம்)

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்கள் தமது தாயகம் மீளுவதுடன் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளுக்கும், இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தையில் உத்தரவாதமளிக்கபபடுவதுடன், அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் முத்தரப்பும் இணக்கபபாட்டை வெளியிடவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சமூக அபிவிருத்திக்கான ஆய்வுச செயலகத்தின் ஏற்பாட்டில் புத்தளம் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் ந நிறைவேற்றப்பட்டது.

"தாயகம் மீளும் வடக்கு முஸலிம்களின அபிலாஷை" என்னும் தலைப்பில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத்பதியுதீன், யூ.என்.எச்.சீ.ஆர் பிரதிநிதி வெரோனிக்கா, வட-கிழக்கு அவசரபுனரமைப்பு உபகுழுவின் உறுப்பினர்களான ஐ. எம். ரமீக் கலாநிதி எஸ். எச். ஹிஸ்புல்லா யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் பிரதிநிதி சபூர்தீன், சட்டஆலோசகர் சட்டத்தரணி சபருள்ளா உட்பட அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வடக்கு முஸ்லம்களின் மீள்குடியேற்றம் திட்டமிடப்பட்ட முறையில் அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தும் நேற்றைய தினம் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், முஸ்லிம்களிடம் வரி அறவிடுதல், முஸ்லிம்கள் வாழ்ந்த இடங்களின் காணிப்பிரச்சினைகளை சுதந்திரமாக தீர்த்துக் கொள்ளல், முஸ்லிம்கள் நலன் மற்றும் சமய விவகாரங்கள் மற்றும தொழில் துறைகளில் எவரும் தலையிடாமை போன்ற விடயங்கள குறித்தும், அடுத்த கட்டப்பேச்சு வார்த்தையில் பேசப்பட வேண்டுமெனவும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை, மீளக்குடியேற்றத்துக் கான சாதகமான சூழ்நிலை ஏற்படும் வரை, தனிநபர்களாக மீளக்குடியமர்த்துவரும் முஸ்லிம்களை, ஒவ்வொரு குடும்பமாக கணக்கிட்டு கொடுப்பனவுகளை வழங்கி வகை செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடகிழக்கைச் சேர்ந்த 18 முஸ்லிம பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவை சந்தித்து அடுத்தகட்ட பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வது குறித்த அழுத்தத்தை கொடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# வல்வெட்டித்துறை கல்வி தரமுயர்த்தல் கூட்டம்

(வல்வெட்டித்துறை)

யுத்தத்தினால் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படும் வல்வெட்டித்துறையின் கல்வித்தரத்தை தரமுயர்த்துவது குறித்த கூட்டம் வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிசன் பாடசாலையில் சிவாஜிலிங்கம் எம்.பி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி, சிதம்பராக்கல்லூரி, வல்வை மகளிர் வித்தியாலயம், சிவகுருவித்தியாசாலை, கெருடாவில் அ.த.க. பாடசாலை போன்றவற்றின் அதிபர்கள், அபிவிருத்திக் குழுவினர் கலந்து கொண்டனர்.

சிதம்பராக்கல்லூரியில் உயர்தர வகுப்புக்கள் அனைத்தையும் நடத்துதல், வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் உயர்தர வகுப்புக்களை நிறுத்த ।அவர்களை சிதம்பராவுடன் இணைத்தல், சிவகுருவித்தியாசாலையில் உள்ள 10,11 ஆம் தரங்களை சிதம்பராவுடன் இணைத்தல், அதேநேரம் 1-11 ஆம் தரம் வரையான வகுப்புக்கள நடைபெறுவதை உறுதிப்படுத்தல் போன்றதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும செய்வதாக சிவாஜிலிங்கம் எம்.பி உறுதியளித்துள்ளார். (உ-63)

# படையினரால் தரப்படும் முரண்பட்ட தகவல்கள் கண்ணிவெடி அகற்றும் பணிகளை தாமதமாக்கும்

## மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் யோகன்

(கிளிநொச்சி)

இலங்கை படைத்தரப்பிடம் இருந்து ஐக்கிய நாடுகளஅபிவிருத்தி திட்ட அமைப்பு பெற்றுததந்த கண்ணி வெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பான வரைபடத்திற்கும் ஏற்கனவே தம்மால் கண்ணிவெடிகள் இனங்காணப்பட்ட பிரதேசங்களிற்கும் இடையில் முரண்பாடுகள் நிலவுகின்றதாகவும்,

இதனால், மேற்குறித்த இடங்களில கண்ணிவெடிகளை அகற்றி பாதுகாப்பு பிரதேசமாக அவற்றை உத்தரவாதப்படுத்த 3 தொடக்கம் 5 வருடங்கள் தேவை என்றும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பரிவின் பணிப்பாளர் யோகன் தெரிவிததுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

படைத்தரப்பின் உரிய இடங்களை சரியாக இனங்காட்டும் வரைபடங்களை வழங்கினால் மட்டுமே துரிதமாக கண்ணிவெடிகள் அகற்றும் பணியினை நாம் மேற்கொள்ளலாம்,

தமிழீழ விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகள 6 முதல் 12 மாதங்களுக்குப் பின்னர் செயலி ழந்து விடும் தன்மை உடையன.

ஆனால் படையினரால் புதைக்கபபட்ட ரீ-72 ரக சீன மிதி வெடிகள் 50 வருடங்களும், பாகிஸ்தானிய தயாரிப்பான ரீ-4 மாஸ்பென் மிதிவெடிகள் 30 வருடங்கள் சென்றாலும் உயிரிழப்பையும் உடற்சேதத்தையும் ஏற்படுத்தும் தன்மை உடையவை.

அத்துடன் வன்னிப் பிரதேசத்தில் 180 கிலோமீற்றர் நிலப்பரப்பில் 15 லட்சம் மிதி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் 17மிதி வெடி வயல்கள் இனங்காணப்பட்டு பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டுள்ளன. இங்கு புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றாது வீதியைப் புனரமைப்பது சாத்தியமாகாது என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஆனையிறவு மற்றும் முகமாலையினை அண்டிய பிரதேசங்களில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் நடைபெற்றுவருவதாகவும் யோகன் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, 23 பெண்கள் உட்பட 322 பணியாளர்கள் சர்வதேசப் பயிற்சி பெற்று மிதி வெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள போதிலும் ஆளணிப்பற்றாக்குறை நிலவுவதால் மேலும் 300 பேர் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)


# வாழ்த்துகிறோம்

மணிவிழாக்காணும் "நீர்வை மணி" தியாகராஜக் குருக்கள் நீர்வை மண்ணின் பண்டிதரையும், பாவலரையும், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ஸ்தாபகரையும் நினைவு கூர்ந்து பாரெல்லாம் புகழ் பரவச் செய்த பெருந்தகையே! பல்வகைச் சிறப்புக்களும் பெற்று மனைவி, மக்களுடன் பல்லாண்டு, பல்லாண்டு காலம் நீர்வை அரசகேசரியான் துணையுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

நீர்வையூரான்,
நீர்வையூர் கே. எஸ். ராஜா
குடும்பத்தினர்.

நீர்வேலி, (C/5796)


# நலிவுற்ற மாணாக்கர் விபரம் திரட்டல்

(சுதுமலை)

வலிகாமம் கல்வி வலயத்திற்குரிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களில் ஊனமுற்றோர், அங்கவீனர், தாய் அல்லது தகப்பனை அல்லது இருவரையும் இழந்த பிள்ளைகளின் விபரங்க ளைத்திரட்டி தனக்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களையும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தற்போது இடம்பெயர்ந்து மீளக்குடிகுடியமர்ந்த பிள்ளைகளின் விபரங்களையும் அவர்கள் தற்போது வசிக்கும் வட்டின் நிலைமை பற்றியும இவ்வறிக்கையில் தெரிவிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-252)

## இனிவரும் பேச்சுக்களிலாவது

# தனித்தரப்பாகப் பங்கேற்க வழி சமைப்பதில் முஸ்லிம் எம்.பிக்கள் பகீரதப் பிரயத்தனம்

(கொழும்பு)

17 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளதாக வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் செயலாளர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீமை நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் சந்தித்து 3 மணி நேரம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப் பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து 12 பாராளுமன்ற உறுப்பினர்களும், தேசிய ஐக்கிய முன்னணியில் இருந்து 3 பேரும்,வடக்கு-கிழக்கில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 2பேரும் ஒருங்கிணைந்து பிரதமரைச் சந்திக்கவுள்ளனர்.

இனிவரும் காலங்களில்நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்கள் சார்பில் தனித்தரப்பாக முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டு அம் மக்கள் சார்பான கோரிக்கைகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என பிரதமருடனான சந்திப்பின் போது வலியுறுத்தப்போவதாகவும் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

பிரதமருடனான சந்திப்பை முடித்துக் கொண்டு அன்றையதினமே நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்போர்கையும் இவர்கள் அனைவரும் சந்திக்கவுள்ளனர்.

ரவூப ஹக்கீமுடனான சந்திப்பில் வன்னிபுனர்வாழ்வு அமைச்சர் நூர்னமஹ்ரீ, பிரதி அமைச்சர் யசீர் ஷேகு தாவுத் பாராளுமன்றஉறுப்பினர்களான ஹரீஸ்,எம்.எஸ் தௌபிக் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-8)

# யோகாசன, தியான வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் யோகாசன, தியான வகுப்புகள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திங்கள்,செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மாலை 4 மணி முதல் 5.30 மணிவரை இடம்பெறவுள்ளன.

இந்தியாவின் பெங்களூர் நகரில் உள்ள யோக ஹேந்திராவில் பயிற்சி பெற்ற ஆசான் நவசிவாயம் சிவனேஸ்வராயா பயிற்சியினை நடத்தவுள்ளார். முதல் நாள் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் , தலைமையில் இடம்பெறவுள்ள இவ் ஆரம்ப நிகழ்வில், ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வரும், சிறப்புரையை 'தியானமும் வாழ்வும்' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி இ. சிவசங்கரும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

# வங்கி அலுவலகத் திறப்பிலும் இனவாதம் மேலோங்குகை

(கொழும்பு)

ஒவ்வொரு மாகாணத்திலும் இலங்கை வங்கி தனது பிராந்திய அலுவலகங்களை நிறுவத் தீர்மானித்ததற்கிணங்க, கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகம் திருகோணமலையில் நிறுவப்படவேண்டுமென முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இப்பொழுது அதனை அம்பாறை மாவட்டத்தில் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இது சிங்களப் பிரதேசமொன்றிலேயே பிரதேச அலுவலகத்தை நிறுவும் இனவாதக் கண்ணோட்டத்தில் இறுதி நேரத்தில் செய்யப்பட்ட மாற்றம் என கிழக்குமாகாண தமிழ் மக்களிடையே அதிருப்தி எழுந்துள்ளது.

இவ் விடயத்தில் கிழக்கு மாகாண தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கவடிவேலிடம் வேண்டுகோள் விடுக்கவிருப்பதாக ரெலோ அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# பொதுநூலக பிரேரணை விவாதிக்கப்படவில்லை

(கொழும்பு)

யாழ். பொது நூலகம் மீளத் திறக்கப்படாமை குறித்து ஜே.வி.பி நடந்த வெள்ளிக்கிழமை சபையில் சமர்ப்பித்திருந்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடைபெறவில்லை.

இப் பிரேரணை மீதான விவாதம் அன்றையதினம் நண்பகல் ஆரம்பமாக விருந்த போதும், இப்பிரேரணையை சபைக்குச் சமர்ப்பித்திருந்த ஜே.வி.பி. உறுப்பினர் ரா. சந்திரசேகரன் எம்பி சபைக்கு உரிய நேரத்தில் சமூகமளிக்காமையினால் மேற்படி பிரேரணை மீதான விவாதம் சபைக்குத் தலைமைதாங்கிய குழுக்களின் பிரதிதவிசாளரால் ஒத்திவைக்கப்பட்டது. (உ-3)

## அச்சுவேலி பொதுச் சந்தையின்

# மீன் விற்கும் பகுதியில் புழுக்கள் பெருக்கம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொதுச் சந்தையின் மீன் விற்கும் பகுதி உரிய வகையில் சுத்தம் செய்யப்படாமையால் அங்கு சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக நுகர்வோரால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் மேற்படி சந்தையில் மீன் வாங்கச் செல்லப் பொதுமக்கள் பின்னடித்து வருகின்றனர்.

மீன்கள் விற்கும் பகுதி உரிய வகையில் சுத்தம் செய்யப்படாமையால் புழுக்கள்பெருமளவில் உற்பத்தியாகிருப்பதாகவும் நுகர்வோரால் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி சந்தை நீர்வேலி பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தின் கீழ் இயங்கியதும் தற்போது உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்ததையடுத்து இவை விசேட ஆணையாளர்களின் நிர்வகிப்பின் கீழ் இருந்து வருவதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (உ)

## பிரி.பல்கலைக்கழகங்களில்

# 4 இலட்சம் இலங்கையர் கல்வி பயில்கின்றனராம்

(கொழும்பு)

பிரிட்டனில் உள்ள பல்கலைக்கழகங்களில் சுமார் 4 லட்சம் இலங்கை மாணவர்கள் கல்வி கற்றுவருவதாக பிரிட்டன் கவுன்சில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரிட்டன் உயர் ஸ்தானிகராலயமும் பிரிட்டன் கவுன்சிலும் இணைந்து நேற்று முன்தினம் கொழும்பில் கல்விக் கண்காட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இந் நிகழ்வில், மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் அங்குஉரையாற்றுகையில் , இக் கண்காட்சி நடத்தப்படுவதன் மூலம் இலங்கையில் சமாதானம் நிலவுகிறது என்பது எடுத்துக்காட்டப்படுகிறது.

இலங்கை மாணவர்கள் நலன் கருதி பிரிட்டன் ஆற்றிவரும் உதவிகள் பெரிதும் பாராட்டத்தக்கவை என்றார்.

இதேவேளை, பிரிட்டனில் உள்ள பல்கலைக்கழகங்களில் கடந்த வருடம் மட்டும் 2ஆயிரத்து 500 இலங்கையர்கள் புதிதாக கல்வியை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# அங்கவீனர்களுக்கு 6 மாத ஆங்கில மொழிப் பயிற்சி

## கூடவே கணனிப் பயிற்சியும்

(கொழும்பு)

சமூக சேவைத் திணைக்களம், அங்கவீனர்களுக்கான மத்திய சபையுடன் இணைந்து இலங்கையில் உள்ள அனைத்து அங்கவீனர்களுக்கும் 6 மாத கணனிப் பயிற்சியினையும், 6மாத கால ஆங்கில மொழிப் பயிற்சியினையும் வழங்கவுள்ளது.

இதன் பிரகாரம் யுத்த அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல அங்கவீனர்களின் பெயர் விபரங்களையும் வடக்கு-கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் திரட்டி வருகிறது.

அதன் அடிப்படையில் கணனிப் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பயிற்சி பெறவிருப்பமுடைய அங்கவீனர்கள் தத்தமது பிரதேசங்களில் பணியாற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளும் படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## குப்பிளான் மின் சக்தி திட்டத்தை ஆரம்பிக்க

# அமைச்சர்கருஜெயசூரிய மார்ச்2 இல்யாழ் வருகிறார்

(கொழும்பு)

மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய,புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, பிரதி அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோர் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரனின் அழைப்பின் பேரில் யாழ். விஜயம் செய்யும் இவர்கள் இலங்கை மின்சார சபையினால் செயற்படுத்தப்படுகின்ற கிராமங்களுக்கான மின்சார செயற்றிட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குப்பிளான் மின் சாரத்திட்டத்தினை திறந்து வைக்கவுள்ளனர்.

இதன் ஓர் அங்கமாக வல்லிபுரக் கோவில் உட்பட இதுவரை மின்சாரம் வழங்கப்படாத குடாநாட்டுப் பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு கான மின் விநியோகத்தையும் அமைச்சர் கரு அங்குராப்பணம் செய்து வைக்கவுள்ளார். (உ)

# இவ்வாண்டு இலங்கையில் பூகம்பம் ஏற்படுமாம்

## பூகோளவியலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

இவ்வாண்டு இலங்கை ஒரு பூகம்பத்தையும் அதனால் பேரழிவுகளையும் சந்திக்க வேண்டிவரும். இவ்வாறு இலங்கை பூகோளவியலாளரான லலித் விஜேவர்த்தன எதிர்வு கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் இவர் கூறிய எதிர்வுகள் பல நிஜங்களாகியுள்ளன. குஜராத்,அகமதாபாத் ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற பூகம்பங்கள் குறித்து இவர் முன்கூட்டியே கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 19 ஆம் திகதி கண்டிப் பகுதியில் வீழ்ந்த விண்கல் குறித்தும் இவர்எதிர்வு கூறியிருந்தார். (உ)

# பெற்றோலிய கூ.தா. பெற்ற கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டன

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தற்போது இலாபம் ஈட்டும் அரசாங்க நிறுவனமாக விளங்குவதாக மின்சக்தி எரிபொருள் பிரதி அமைச்சர் கஜேந்திர ரட்ணநாயக்கா தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டியில் அண்மையில் நடைபெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் வர்த்தக வங்கிகளில் இருந்து 3ஆயிரத்து 200 கோடி ரூபாவை கடனாகப் பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போதையஅரசு ஆட்சிக்கு வந்ததும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றகடன் தொகையை திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இது லாபம் ஈட்டும் அரச நிறுவனமாகவும் மாறியுள்ளது எனக் குறிப்பிட்டார். முன்னைய ஆட்சிக் காலத்தில் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் நட்டத்தில் இயங்கி வந்தமையினையும் அவர் சுட்டிக்காட்டினார். (உ-10)

## அதிக வரிஅறவீடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் உள்ள சந்தைகளில் மீன் வியாபாரிகளிடம் அறவிடப் படும் விற்பனை வரி, நிலவாடகை என்பன குறித்து சம்பந்தப்பட்டவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தினமும்நிலவாடகையாக 10 ரூபாவும் விற்பனை வரியாக 100 ரூபாவுக்கு 10 ரூபா என்ற அடிப்படையிலும் பணம்அறவிடப்படுகிறதாம்.

இதன் தாக்கத்தை கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் ஆகியோரும் அனுபவித்து வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-75)

## இந்தியா ஊடாக மருந்துப்பொருட்கள்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்படும் மருந்துப் பொருட்களை இந்தியா ஊடாகப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார். (உ-10)

## சமுர்த்தி வங்கித் திறப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சமுர்த்தி வங்கி எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

நாரந்தனை தெற்கு செருக்கன் சந்தியில் தனியார் வீடொன்றில் அமைக்கப்பட்டுள்ள இச் சமுர்த்தி வங்கித்திறப்பு விழா ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எஸ். செல்வநாயகம் தலைமையில் நடை பெறவுள்ளது. (உ-751)

## வாசிப்புப் போட்டி

(கொய்யாத்தோட்டம்)

பாசையூர் கலையகம், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மட்டத்தில் பொது வாசிப்புப் போட்டியை நடத்தவுள்ளது.

எதிர்வரும் பாஸ்கா திருநாளை முன்னிட்டு, இளைய சமுதாயத்தினரிடையே சமய உணர்வை வளர்க்கும் வகையிலும் இப் போட்டி நடத்தப்படவுள்ளது. (உ-53)

## மதில் அமைப்பு பூர்த்தி

(குருநகர்)

தந்தை செல்வநாயகம் நினைவுச் சதுக்கத்தைச் சுற்றி மதில் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. மேற்கூற முனீஸ்வரன் வீதியிலும், தெற்கில் பிரதான வீதி, கிழக்கில் மணிக்கூட்டு வீதி ஆகிய பகுதிகளில் பெரிய இரும்புக்கதவுகள் போடப்பட்டுள்ளன. (உ-74)

## பொலிஸ்மா அதிபரிடம் மேலும் அதிகாரங்கள்

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் உள்ள கடைநிலை உத்தியோகத்தர்களின் விவகாரங்களை கையாளுவதற்கான அதிகாரங்களை பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (உ-10)

## இன்று ஒரு தகவல்

### முட்டை ஓட்டுத் தத்துவம்

"அப்பா! மின்சாரப் பல்பு பியூசாகிப் போய்விட்டது. வேறு ஒன்று வாங்கி மாட்ட வேண்டும்" என்றான் பையன். "சரி... போய் புதிதாக ஒன்று வாங்கிக் கொண்டு வா" என்று காசு கொடுத்தார் அப்பா. இவன் ஓடிப் போய் வாங்கிக் கொண்டு வந்தான். அப்பா அதை வாங்கி மாட்டினார். பின்னர் அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான் பையன். ஏனப்பா... இந்த பல்பு உடைய மாட்டேனென்கிறது? என்று இது என்னடா கேள்வி.. நாம் கீழே போடவில்லை அதனால் உடைய வில்லை என்றார். அப்பாவினுடைய புத்திசாலித்தனம் அவ்வளவுதான். ஆனால் பையன் கேட்டது அந்த அர்த்தத்திலல்ல. ஒரு மின்சார பல்புக் குமிழின் கண்ணாடி இருக்கிறதல்லவா? அதனுடைய கனம் எவ்வளவு இருக்கும்? ஒரு மில்லி மீற்றர் கனம் தான் இருக்கும்.

அவ்வளவு மெல்லியதாக இருக்கும் ஒரு கண்ணாடிக் குமிழை-ஹோல்டரில் மாட்டுகிற பொழுது நமது விரலால் அழுத்திப் பிடித்துத் திருக வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்கிற போது அது உடைவதில்லை. நம்முடைய விரலின் அழுத்தத்தைத் தாங்கி நிற்கிற அளவுக்கு அதற்கும் பலம் எங்கேயிருந்து வந்தது. இது தான் பையன் கேட்ட கேள்வியின் அர்த்தம். இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு விஞ்ஞான அறிவு அதிகம். அதனால் இப்படியெல்லாம் கேள்வி கேட்பார்கள். அப்பாவுக்குத் தெரிகிறதா இல்லையா என்று சோதிப்பதற்காக! இது போன்ற சோதனைகளுக்கெல்லாம் இந்தக் காலத்து அப்பாக்கள் தயாராக இருக்க வேண்டும். இல்லையென்றால் பையன் அலட்சியமாக நினைத்து விடுவான்.

மின்சாரபல்பு கண்ணாடி மெல்லியதாக இருந்தாலும் நாம் அழுத்திப் பிடிக்கிறபொழுது அது உடையாமல் இருப்பதற்குக் காரணம் நாம் இயற்கையினுடைய ஒரு தத்துவத்தை அதில் பயன்படுத்தியிருக்கிறோம். அது என்ன இயற்கையின் தத்துவம்? அது தான் "முட்டை ஓட்டுத் தத்துவம்" இது இயற்கை உருவாக்கிய ஒரு தத்துவம். ஆதி காலத்திலேயே இயற்கை இத்தத்துவத்தை உருவாக்கிவிட்டது. அதாவது பறவைகளினுடைய முட்டைகளின் ஓடுகள் எப்படி இருக்கின்றன? அதனுடைய கனம் எவ்வளவு இருக்கும்? மின்சாரபல்பு மாதிரித்தானே! மிகவும் மெல்லியதாகத் தான் இருக்கிறது. பறவைகள் இனவிருத்திக்காக முட்டை போட வேண்டும். அந்த முட்டை எப்படி இருக்க வேண்டும். இயற்கை கொஞ்சம் யோசித்துப் பார்த்தது. முட்டை ஓடு மிகவும் கனமாக-தடிப்பாக இருந்தால் உள்ளே வளர்கிற குஞ்சு அதை உடைத்துக் கொண்டு வெளியில் வரமுடியாமல் போய்விடும். அதே நேரத்தில் அது மிகவும் மெல்லியதாக இருந்தால் தாய்ப்பறவைகள் அதன் மேல் உட்கார்ந்து அடைகாக்கின்ற பொழுது உடல் எடை தாங்க முடியாமல் உடைந்து போய் விடும்.

என்ன செய்வது? முட்டை பலமாகவும் இருக்க வேண்டும். பலமில்லாமலும் இருக்க வேண்டும். குஞ்சு அதை உடைத்துக் கொண்டு வெளியே வரவேண்டும். தாயாலே அது உடையக் கூடாது. ஒரே நேரத்தில் உறுதியாகவும், உறுதியில்லாமலும் முட்டை ஓடு அமைய வேண்டும் என்றால் இது எப்படிச் சாத்தியம். இது கொஞ்சம் குழப்பமாகவும்-நமக்குப் புரியாதது மாதிரியும் இருக்கிறது அல்லவா? அதனால் தான் இதைத் தத்துவம் என்று சொல்கிறோம். முட்டை ஓட்டுத்தத்துவம்! இயற்கை கண்டு பிடித்த ஒரு அபூர்வமான அமைப்புத் தான் முட்டை வடிவம். இது தாய்ப்பறவை சுலபமாக முட்டை போடுவதற்கு ஏற்ற வடிவம். முட்டை சதுர வடிவமாக இருந்தால் அதைப் போடுவதற்கு எவ்வளவு கஷ்டம்? பின்னர் அதன் மேல் செலுத்தப்படுகின்ற அழுத்தம் நாலாபக்கமும் பரவி விடுகின்றது. அதனால் அந்த அழுத்தத்திற்குப் பலம் குறைந்து விடுகிறது. அதாவது அழுத்தம் வலுவிழந்து விடுகிறது. அதனால் ஒரு குறிப்பிட்ட சிறுபரப்பில் அளவுக்கு அதிகமான விசை செலுத்தப்படுவதில்லை.

அதனால் முட்டையின் வடிவம் தான் அந்த உறுதிக்குக் காரணம். இது எப்பேர்ப்பட்ட தத்துவம்? இதைத்தான் மின்சாரபல்பு செய்கிற பொழுது நாம் பார்த்துப் பிரதி பண்ணியிருக்கிறோம். பொது வகுப்பில் பார்த்து எழுதினால் (காப்பியடித்தல்) முட்டை போடுவது வழக்கம். நாம் முட்டையையே காப்பியடித்திருக்கின்றோமே. இது எப்பேர்ப்பட்ட காப்பி!

ஒரு ஆசிரியர் வகுப்பில் பையன்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். கோழி முட்டை இடுமா? முட்டை போடுமா? என்று கேட்டார். ஒரு பையன் எழுந்து பதில் சொன்னான். கோழி முட்டை இடும் சார்! முட்டை போடாது என்றுசொன்னான். ஏன் போடாது என்றார் ஆசிரியர். போட்டால் உடைந்து விடும் சார்! என்றான் பையன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிரதான கட்சிகள் ஒன்று படாதவரை

# இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை

### சித்தார்த்தன் எம்.பி. கருத்து

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இரு பிரதான கட்சிகளும் தமக்கிடையேயுள்ள வேறுபாடுகளை மறந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு வழங்கினால் மாத்திரமே நீண்ட கால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

புளொட் அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இடதுசாரிக்கட்சிகளுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சித்தார்த்தன்,

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நடைபெற்று வந்த யுத்தம் காரணமாக அப்பிரதேச மக்கள் கடும் துன்பங்களை அனுபவித்து வந்துள்ளனர்.

ஆனால், கடந்த ஒரு வருடமாகவே அவர்கள் யுத்தப்பீதிகள் எதுவுமற்று வாழ்ந்து வருகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் வரவேற்கத்தக்கன. இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர்அணி) ஈரோஸ் மற்றும் புளொட் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (உ-8)



## புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில்

# சமுர்த்தி வேலைத் திட்டங்கள்

### 2கோடி 55 இலட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு முதல் சமுர்த்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக 2 கோடி 55 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் ஏ.ஆ.டீ.சிறீசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் சமுர்த்தி சமூக அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக இவ்வாண்டு 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சிறீசேன தெரிவித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தி, விவசாயம், கைத்தொழில், கால்நடைஅபிவிருத்தி மீன்பிடி, சமூக அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்நிதி ஒதுக்கீட்டில் குருநாகல் மாவட்டத்திற்கு மிக கூடுதலான நிதியாக 2கோடி 98 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு மிகக்குறைவான நிதியாக 72 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## இராசி பலன்

**24. 02. 2003**

**(மாசி 12, திங்கள்)**

அட்டமி பி.ப 1.22வரை
அனுஷம் நண்பகல்12.07வரை
இராகுகாலம் 8.00-9.30
சுபநேரம் 12.30 - 2.00
அட்டமி-நவமி

**மேடம்**
உடல் சோர்வு,முயற்சி தாமதம், எதிர்பாராத பிரச்சினை, பிரயாணபயம்.

**இடபம்**
சௌக்கிய விருத்தி, நண்பர்கள் சந்திப்பு, சிந்தனை மிகுதி, விருந்துபசாரம்.

**மிதுனம்**
நினைத்த காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, செய்தொழில்விருத்தி, உடல் நலம்.

**கடகம்**
வியாபார நன்மை, கலகம்,குடும்பக் கவலை, முயற்சிதாமதம்.

**சிங்கம்**
உடல்நலக்குறைவு, வீண்பயம், பிரயாணம், மாணவர் கல்வியில்ஆர்வம்.

**கன்னி**
காரியசித்தி, அந்நியர்சந்திப்பு, தன வரவு, வாகன சுகம்.

**துலாம்**
வாக்குவாதம், உறவினர் தொடர்பு, தனவிரயம், தொழில் கஷ்டம்.

**விருச்சிகம்**
பெரியோர் ஆதரவு, கற்பனை மிகுதி, அபூர்வபுண்ணியம், முயற்சி பலிதம்.

**தனுசு**
சயனசுகக்குறைவு, பிரயாண அலைச்சல், சத்துரு ஜெயம்,சுபசெலவு.

**மகரம்**
காரிய சித்தி,மனமகிழ்ச்சி, தொழில் நன்மை, தனலாபம்.

**கும்பம்**
அதிக பிரயாசை, நிலைமாற்றம், அதிகாரம், பயமின்மை.

**மீனம்**
காரிய தாமதம், நண்பர் விரோதம், சுரம்,புதிய திட்டமிடல்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## தூக்கத்தில் இருந்த சமயம் வீட்டிற்குத் தீ வைப்பு

(பாசையூர்)

வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்த சமயம் வீட்டிற்குத் தீ வைத்த சம்பவம் கடந்த புதனன்று கொய்யாத்தோட்டம், புதுவீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி தீ வைப்புச் சம்பவத்தினால் வீட்டின் முன் பக்கம் சேதமடைந்ததுடன்,அயலவரின் உதவியுடன் தீ மேலும் பரவவிடாது உடனடியாகவே அணைக்கப்பட்டது.

ம.சறோஜினி என்பவருக்குச் சொந்தமான வீட்டிற்கே இவ்விதம் இனம் தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டது.

மேற்படி சம்பவத்தினால் வீட்டில் இருந்த ஆட்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-72)

## வவுனியாவில் சமாதான சர்வ மதப் பேரணி

(வவுனியா)

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த ஒருவருடப் பூர்த்தியை ஒட்டி வவுனியாவில் நேற்று முன்தினம் சமாதானத்திற்கான பேரணியொன்று நடத்தப்பட்டது.

வவுனியா சித்தாமணி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான இப்பேரணி, கண்டி வீதி வழியாக புத்தவிகாரைக்குச் சென்று, பள்ளிவாசல் ஊடாக இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்தது.

இவ்அமைதிப் பேரணியில் மதத் தலைவர்கள் உட்பட சகல மதத்தையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பேரணி முடிவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கான மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டன. (வ)

## லஞ்சம் பெற்ற பொலிஸாருக்கு

# தகுந்த பாடம் புகட்டிய

# ம.உ.ஆ.கு. அதிகாரி

(யாழ்ப்பாணம்)

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில சென்றவரிடம் பொலிஸார் ஒருவர் லஞ்சம் பெற்றமையை அவதானித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகர, பணத்தை மீளப் பெற்று உரியவரிடம் ஒப்படைத்ததுடன், சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர் தொடர்பாக மேலதிகாரிகளுக்கு முறையிடவும் முடிவு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை றக்கா வீதியில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து ருவான் சந்திரசேகர தெரிவித்ததாவது,

மேற்படி வீதியினால் நான் சென்று கொண்டிருந்த வேளை தலைக் கவசம் அணியாத இளைஞர் ஒருவர் வழிமறிக்கப்பட்டு அவரிடம் இருந்து தண்டப்பணம் அறவிடப் படுவதையும், பணத்தைப் பெற்றுக் கொண்ட பொலிஸார் அதற்கான பற்றுச் சீட்டினைவழங்காமையையும் அவதானித்தேன்.

இதனையடுத்து, நான் நேரில் சென்று விசாரித்த போது உண்மை நிலையை அறிந்து கொள்ள முடிந்தது.

இவ்வாறான சம்பவங்கள் இந்த பொலிஸ் சாவடியில் இடம்பெறுவதாக எனக்குப் பல முறைப்பாடுகள் ஏற்கனவே கிடைத்திருக்கின்றன என்று குறிப்பிட்டார். (த-5)

## உழவர் சந்தையின் அவசியம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று விவசாய சம்மேளனத்தின் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில்கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் விவசாய சம்மேளன உறுப்பினர்கள், ப.நோ.கூ.ச.முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* தென் இலங்கையில் இருந்து கொண்டு வரும் நெல் மற்றும் அரிசியை வவுனியாவிற்கு உள்ளே கொண்டு வராமல் எமது பிரதேசத்தில் உள்ளவற்றை சந்தைப்படுத்தல்.

* உழவர் சந்தை ஒன்றை ஏற்படுத்தல் ஆகிய கோரிக்கைகள் இதில் முன் வைக்கப்பட்டன. (உ-7)

### விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராமநாதன் கலட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் அதே இடத்தைச் சேர்ந்தவரான க.சுமணன்(வயது22) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-7)

முறைப்படைச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர். — குறள்

# வலம்புரி

## பழைய பல்லவி

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒருவருட நிறைவையொட்டி பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

யுத்தம் நிறுத்தப்பட்டு ஒரு வருடம் பூர்த்தி அடைந்தமையை நினைவு கூருவது நியாயமானதே.அவ்வகையில் அரசின் சமாதான முயற்சி குறித்து பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவின் உரையை மக்கள் ஆவலோடும், எதிர்பார்ப்புக்களோடும் காத்திருந்தனர். எனினும் பிரதமரின் உரை பழைய பல்லவி பாடுவதாகவே இருந்ததே ஒழிய எதிர்பார்ப்பின் ஆவலுக்கு தீனி போடுவதாக அவரின் உரை இருக்கவில்லை என்பது வேதனைக்குரியதே.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒருவருடம் பூர்த்தியானதையிட்டு பிரதமர் ரணில விக்கிரம சிங்கா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில சமஷ்டி, உயர்பாதுகாப்பு வலயம என்பன குறித்து பிரஸ்தாபிதிருந்தாராயினும் அவற்றின் விரிவு படுத்தப்பட்ட விடயங்களை அறியமுடியவில்லை.

ஏதோ கடந்த காலங்களில உரையாற்றியது போல் சமஷ்டி, உயர்பாதுகாப்பு வலயம் எனச் சர்வ சாதாரணமாக தற்போது உரையாற்ற முடியாது. ஏனெனில் இப்போது அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்த வண்ணமுள்ளது. இந்நிலையில உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் அவல வாழ்க்கை நடாத்தும் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியிருக்க அனுமதிக்கமாட்டார்களா என்ற ஏக்க உணர்வோடு உள்ளனர். இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவின் உரை அந்த ஏக்கத்தை தணிப்பதாக இருக்க வேண்டும் ஆனால் பிரதமரின உரை அப்படி எதையும் ஆற்றுபபடுத்துவதாக அமையவில்லை.

மாறாக, போர் நடந்த காலத்திலேயே விடுதலைப் புலிகள் தமது ஆயுதபலத்தை அதிகரித்திருந்தனா.சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஆயுத பலத்தைப் புலிகள் அதிகரிக்கவில்லை என்ற உண்மை நிலையை பிரதமர் கூறியிருப்பது எதிர்கட்சிகளின் பிரசாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருப்பதோடு,விடுதலைப்புலிகள் பற்றிய சர்வதேசத்தின் நிலைப்பாட்டிலும் ஓர் தெளிவை ஏற்படுத்தியுள்ளது. அவ்வகையில் பிரதமரின் உரை பாராட்டுக்குரியது ஆகும்.

எனினும், இலங்கை இனப் பிரச்சினையில் சமாதானம் என்பது வெறும் வாய்ப்பேச்சுக்களமுலம் ஏற்படக் கூடியது அல்ல, அதற்கு கணிசமான விட்டுக் கொடுப்புக்களும் ,தியாகங்களும் அவசியம. அத்தகைய தியாக உணர்வும் பொறுமையும்இல்லாத பட்சதத்தில் சமாதான முயற்சி என்பது தனது இலக்கை அடைய முடியாத தொன்றாகவே முடிந்து

# ஒரு வருடமாக அமுலில் உள்ள ஒப்பந்தத்தின் பயனைப் பொதுமக்கள் அனுபவிக்கவில்லை

## சுட்டிக்காட்டி நோர்வேத் தூதுவருக்கு மகஜர்

(தென்மராட்சி)

சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மிகவும் நல்ல முறையில் இடம் பெற்ற முதல் மூன்று சுற்றுச் சமாதானப் பேச்சுக்களும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டன. ஆயினும் நான்காம், ஐந்தாம் சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் எதிர்பார்த்த பயன்களைத் தரவில்லை. அதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கையில் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களும், அகதிகளும் நட்டாற்றில் விடப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களினால் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவருக்கு "யுத்த நிறுத்த ஒப்பந்தமும் சிறிலங்காவில் சமாதான முறைமைகளும்" எனும் தலைப்பிலான மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற, குடாநாட்டை ஸ்தம்பிதமடையச் செய்யும் சில மணிநேரப் போராட்டத்தைத் தொடர்ந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மனித நேய அமைப்புக்களின் தலைவர் எஸ்.பரமநாதன் வண. பிதா சீ.ஜீ.ஜெயகுமார், இணைச் செயலாளர் எம்.தர்மரத்தினம் மற்றும் இந்து சமய குருக்களும் இணைந்து அம்மகஜரை கையளித்தனர்.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

### நோர்வேக்கு பாராட்டு

சமாதான உடன்படிக்கையின் முதலாவது வருடப் பூர்த்தி தினம் இன்று கொண்டாடப்படுகின்றது. யாழ். மாவட்ட மனித நேய அமைப்பு நோர்வே அரசு எடுத்து வரும் முயற்சியைப் பாராட்டுவதுடன், அதற்கான நன்றியறிதலையும் வெளிப்படுத்திக் கொள்கிறது.

இக்கட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதானப் பேச்சுக்கள் பற்றி அராயப்படவேண்டியது இந்த தருணத்தில் அவசியமாகியுள்ளது. இப்பேச்சுக்கள் எக்கட்டத்திலும் முறிவடையாமல் பார்த்துக் கொள்வதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அண்மையில் மானிப்பாயில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது செய்தியாளர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டதுடன், அவரது புகைப்படக் கருவியும் சேதமாக்கப்பட்டது. இது அப்பட்டமான மனித உரிமை மீறல் சம்பவமாகும். இது போன்ற சம்பவம் சில மாதங்களுக்கு முன்னர் நெல்லியடியிலும் இடம்பெற்றது.

இச்சம்பவங்கள் குறித்து முறைப்படி விசாரணைகள் செய்யப்பட வேண்டும். இவற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப படவேண்டும். அதேவேளை, மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களும் எதிர் காலத்தில் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

### நல்லிணக்கத்தின் அவசியம

பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையிலும் பாதுகாப்புப்படையினருக்கும் பொது மக்களுக்குமிடையிலும், அரசுக்கும் பொது மக்களுக்குமிடையிலும், விடுதலைப் புலிகளுக்கும் பொது மக்களுக்குமிடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளவும் ஏற்படுத்த பின்குறிப்பிடப்படும் விடயங்களில் இரு தரப்பினரும் இணக்கமான கவனமும் ஈடுபாடும் காட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

*புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் உருவாக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படவேண்டும்

*பாதுகாப்புப் படையினரின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளின் இடப்பரப்பினைக் குறைத்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும். இவர்கள் விவசாயம் மற்றும் சுய தொழிலில் ஈடுபட வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

*இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர வசதியாக மிதிவெடிகள் யாவும் துரிதமாக அகற்றப்படவேண்டும்.

*அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் மீளக் குடியமரும் வரை அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப படவேண்டும்.

*பொது மக்களின் வீடுகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் இன்னமும் தங்கியிருக்கும் பாதுகாப்புப் படையினர் உடனடியாக அவற்றில் இருந்து விலக வேண்டும். அதே போல யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள்ளும், யாழ். நகர மையப் பகுதிகளிலும் பல இடங்களில் படையினர் முகாம்களும் சோதனை நிலையங்களும் அமைந்துள்ளன. இதனால் வர்த்தகச செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன், பொது மக்களின் சுதந்திரமான நடமாட்டமும் பாதிப்படைகிறது.

*கிராம மட்டத்தில் சிறந்த சுகாதார வசதிகளும் குடிநீர் விநியோகமும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*போக்குவரத்துச் சேவையை மேம்படுத்த மேலதிக பஸ்வண்டிகள் வழங்கப்படவேண்டும்.

*விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவேண்டும்.

*பாடசாலைகளுக்கு தளபாட வசதிகள் செய்யப்படுவதுடன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கட்டடங்கள் விரைவில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

*யாழ்-கண்டி வீதியில் இலகுவான போக்குவரத்து வசதிகள் மேற்கொளளப்பட வேண்டும். நேரக்கட்டுப்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும்.

*கிராமிய மட்டத்தில் தபால் சேவைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

*அரச, தனியார் கைத்தொழில் சேவைகள் மேம்படுத்தப்படல் வேண்டும்.

*வலி வடக்கிலுள்ள கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய சமயத் தலங்களுக்கு இந்துக்கள் சுதந்திரமாகச் செல்லக் கூடிய நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆகியோருக்கும் உரிய நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. (உ-77,4,7)

# எமிரேட்ஸ் விமான நிறுவனத்திற்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் அத்தியட்சகரான எப்.என்.டீ.ஜில்லா என்பவர் 3 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் நட்ட ஈடு கோரி தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்ட கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி ரணில் தர்மசேன எமிரேட்ஸ் விமான நிறுவனத்திற்கு அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி டுபாயில் விமானத்தில் ஏறிய போது தனது கைப்பையினுள் பிரயாணிகள் காசோலையும், பணமுமாக 3 ஆயிரம் டொலர்களும் இருந்தன.

விமான ஊழியர் அந்தக் கைப்பையைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுப் பெற்றுக் கொண்டதுடன், கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கியதும் கைப்பையை தர மறுத்து விட்டனர் என்றும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

தான் விமான நிலைய பணியாளர்களின் நடத்தையினால் குழப்பமடைந்து சகல அதிகாரிகளுக்கும் முறையீடு செய்ததாகவும், நான்கு மணித்தியாலங்கள் காத்திருந்து விமான நிலைய எமிரேட்ஸ் பிரதிநிதிக்கும், சீ.ஐ.டீ.யினருக்கும் முறைப்பாடு செய்திருந்ததாகவும் தெரிவித்துள்ள 84 வயது ஓய்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் 3 ஆயிரம் டொலர்கள் நட்டஈடு தருமாறும் நீதி மன்றத்திடம் முறையிட்டுள்ளார். (உ)

# குண்டெறிதல் பயிற்சியின் போது குறுக்கே சென்ற மாணவன் காயம்

(சண்டிலிப்பாய்)

குண்டெறிதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை குறுக்கே சென்ற மாணவன் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யா/சிந்மயபாரதி வித்தியாலயத்தில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் தரம்-7 மாணவனான மா.செல்வகாந்தன் (வயது 12) என்பவரே தலையில் படுகாயமடைந்துள்ளார். (உ-258)

## தினசரி தியானம்

# இளமைப்பருவம்

வாலிபத்தில் தான் மனிதன் எளிய வாழ்க்கை மேற்கொள்ளவும், இறைவனது நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கவும், யோகப் பயிற்சியைச் செய்யவும், கீதை மற்றும் அருளுரைகளைப் படிக்கவும், புலன்களை அடக்கவும் முயற்சிக்க வேண்டும். கீர்த்தனைகளைப் பாடுவதும், இறைவன் திருப்பெயரை உச்சரிப்பதும், உங்களுக்கு மகிழ்ச்சியையும் மேலான மன அமைதியையும் அளிக்கும். இதைப் பயிற்சி செய்வதன் மூலம்தான உணர முடியும். ஆன்மீகப் பயிற்சிக்கு வாலிபமே சிறந்த பருவம்.

சுவாமி சிவானந்தர்

# சீனக்குடா காட்டுப் பகுதியில் ஆயுதங்கள் மீட்பு

(திருகோணமலை)

சீனக்குடா சங்கமக் காட்டுப் பகுதியில் பெருமளவு ஆயுதங்கள் பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

கைக்குண்டுகள், துப்பாக்கிகள், தோட்டாக்கள், ஆர்.பி.ஜி. மோட்டார் குண்டுகள் என்பனவே இவற்றில் அடங்கும்

திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான உபாலி கேபகெயின் உத்தரவின் பேரில் இரகசியப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-10)

# நாட்டுக்கூத்து கலைஞர்கள் விபரங்கள் சேகரிப்பு

(கொய்யாத்தோட்டம்)

நாட்டுக்கூத்து மற்றும் நாடக, நடன, வாத்திய இசைக் கலைஞர்களின் விபரங்கள் மற்றும் இது தொடர்பிலான ஆக்கங்களைத் திரட்டும் நடவடிக்கையில் பாசையூர் கலையகம்ஈடுபட்டு வருகின்றது.

பழம்பெரும் கலையும், பாஷையூர் கிராமத்தில் பெயர்பெற்ற கலையுமான நாட்டுக் கூத்தை வளம்படுத்தி பேணி வளர்த்த மறைந்த, முதிர்ந்த கலைஞர்களையும்,

இசை, நாடகம், வசனநாடகம், இசை, நடன, வாத்தியக் கலைஞர்களின் விபரங்களையும் அவர்களின் ஆக்கங்கள், வெளியீடுகள், படைப்புக்கள்போன்றவற்றை ஆவணப்படுத்தும் நடவடிக்கையினையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

எழுத்துருவிலும் ஒலி, ஒளி நாடாக்களிலும் பதிவுசெய்வதுடன் அவற்றைக் காட்சிப்படுத்தி இளம்தலைமுறையினரை கலைத் துறையில்வளர்த்தெடுப்பதற்கான முன்னோடி செயல்பாடுகளிலும் இக்கலையகம் ஈடுபட்டு வருகின்றது. (உ-53)

## முஸ்லிம்கள் குறித்த விடயங்கள்

# திருமலை சிரான் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும்

(புத்தளம்)

வடமாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் எந்தவிதக் கட்டுப்பாடுகளின்றி இடம்பெற வேண்டும் என்று தாயகம் மீளும் வடக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகள் என்னும் தலைப்பில் புத்தளம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கான முழுமையான நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான முழுமையான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முஸ்லிம் புத்திஜீவிகளைக் கொண்ட குழுவொன்றை அமைப்பது தான் தாயகப் பூமியில் தமிழ் பிரதேச அபிவிருத்திகளைப் போன்று முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்களும் உடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வட கிழக்கு புனரமைப்பு உப குழுவின் பிரதிநிதியுமான ரிசாத் பதியுதீன் கருத்தை முன்வைத்துள்ளார்.

எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறும் சிரான் கூட்டத்தின் போது வடமாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் குறித்து முக்கிய பேச்சுக்கள் இடம்பெறுமெனவும் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் சபுர்தீன், யூ.என்.எச்.சீ.ஆர். பிரதிநிதி வெரோனிகா, சிரான் உறுப்பினர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (உ)

தமிழீழ தேசிய விளையாட்டு விழா

# இறுதிப் போட்டிகள் இரண்டில் யாழ். அணிகள் இன்று மோதும்

(கிளிநொச்சி)

இரண்டாவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டிகள் இன்றும் நாளையும் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று நடை பெறும் வலைப் பந்து,கரப் பந்துப் போட்டிகளில் யாழ்-மன்னார் அணிகள் மோதுகின்றன.நாளை நடைபெறும் உதைபந்தாட்ட போட்டியில் மன்னார், திருகோணமலை அணிகள் மோதுகின்றன.

இதேவேளை அம்பாறை - திருமலை அணிக்கும், வவுனியா-மட்டக்களப்பு அணிக்குமிடையில் இன்று அரை இறுதி மென் பந்துபோட்டி நடைபெறவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணிகள் இறுதிப்போட்டியில் மோதும்.(த)

# மென் பந்துப் போட்டியில் யாழ்.அணி தோற்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெற்று வரும் தமிழீழத்தேசிய பெரு விளையாட்டு விழாவின் நான்காம் நாளான நேற்று மட்டக்களப்பு, யாழ். அணிகளுக்கிடையில் நடைபெற்ற மென்பந்துப் போட்டியில் யாழ். அணி தோல்வியடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 15 ஒவர் முடிவில் 9 விக்கெற்றுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.அணி 11.3 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியடைந்தது.

முல்லைத்தீவு, அம்பாறை அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 62 ஓட்டங்களைப் பெற்றது.இதில் ஓட்டங்கள் எதுவும் பெறாத நிலையில் நான்கு பேர் ஆட்டமிழந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அம்பாறை அணி 13.5 ஓவரில் 5 விக்கெற்றை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

மன்னார், மட்டக்களப்பு அணிகளுக்கிடையில் உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் மன்னார் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மட்டக்களப்பு,யாழ். அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்துப் போட்டியில் யாழ்.அணி 54-19 என்ற நிலையில் வெற்றி பெற்றது. கிளிநொச்சி - மன்னார் அணிகளுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் அணி வெற்றி பெற்றது. (த)

## ஈழமக்கள்...

பதைக் கண்டார்.உடனடியாகப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தார்.இதனைத் தொடர்ந்து ஸ்தலத்திற்குச் சென்ற பொலிஸார் முற் பகல் 11.30 மணியளவில் ஆயுதங்களை மீட்டனர்.மேற்படி ஆயுதங்களை மறைத்து வைக்கப்பட்டமை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக நேற்று வரை எவரும் கைது செய்யப்படவில்லை. (த-4,7,43)

## மேஜர் கதிரொளி வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கடற்புலி மேஜர் கதிரொளி (கிருஷ்ணபவான் சசிக்குமார் - துக்கப்புலோ மாதகல்) கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவில் இடம் பெற்ற தவறுதலான வெடி விபத்தில் வீரச்சாவடைந்துள்ளார்.

இவரது வித்துடல் இன்று மு.ப 11மணிக்கு மாதகல் சென் .தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் வீரவணக்க அஞ்சலிக்காக வைக்கப்படும்(த)



நேற்று நல்லூர் முன்றலில் சமாதான நீதிவான்களால் நடத்திய உண்ணாவிரதத்தின் காட்சி..

பிறந்த தின வாழ்த்துக்கள் பிறந்த தின வாழ்த்துக்கள் பிறந்த தின வாழ்த்துக்கள்

மூன்றாவது பிறந்த தின வாழ்த்து

HAPPY BIRTHDAY



24-02-2003

செல்வன் விஜயவர்மன் லருசன்

EXPO VIDEO COMPLEX

மூன்றாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் விஜயவர்மன் லருசன் ஆண்டவன் அருளையும் அறிஞர்களின் ஆசியையும் பெற்று கல்வி, கலைகள் கற்று நீண்ட பெருநு வாழ்வு வாழ வாழ்த்தி ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (5798) திரு.மு.வாமதேவன் குடும்பத்தினர்.

பிறந்த தின வாழ்த்துக்கள் பிறந்த தின வாழ்த்துக்கள் பிறந்த தின வாழ்த்துக்கள்

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

## புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து மீளாய்வு

(கிளிநொச்சி)

தமிழழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுபபினர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் வெளிநாடு சென்றுள்ள கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தவிர்ந்த 14 தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கிளிநொச்சி செல்வதற்கு வசதியாக பாதுகாப்பு அமைச்சின் விஷேட உத்தரவின் பேரில் ஓமந்தை,முகமாலை சோதனைச் சாவடிகள் நேற்றுத் திறக்கப்பட்டிருந்தது.நேற்று இடம் பெற்ற சந்திப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து மீளாய்வு செய்வதுடன்,மக்களின் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படாமை குறித்தும்,அகதி முகாம் நிலைவரம் குறித்தும் ஆராயப்பட்டது.

இச் சந்திப்பில் மக்களுடைய கருத்துக்கள் அரசியல் உரிமைகள் சம்பந்தமான விடங்கள் பற்றி அடிக்கடி கலந்துரையாடலை நடத்துவதெனவும் முடிவு செய்யப் பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருடன் இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள இரா.சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன்,கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாதம் ஒருதடவை சந்திப்புக்களை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (வ)

## பொலிஸார் சூட்டதில் முஸ்லிம் இளைஞர் காயம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் நிந்தாவூரில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொது மக்களை கலைக்க மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற லொறி விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் பலியானதன் எதிரொலியாகவே மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

## அமைச்சர்...

வடபகுதி இராணுவக் கட்டளைத் தளபதி சரத் பொன்சேகா,உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லயன் ஜெயசேகரா ஆகியோர் கலந்து கொண்டனர். இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து அமைச்சர் மிலிந்தமெறக்கொடவும்,பாதுகாப்பு அமைசசின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் வாகனத் தொடரணி மூலம் குறிகட்டுவான் இறங்கு துறையை அடைந்து அங்கிருந்து வோட்ட ஜெற் படகு மூலம் நெடுந்தீவை அடைந்தனர்.

ஏனைய படை அதிகாரிகள் உலங்கு வானூர்திகள் மூலம் நெடுந்தீவு மத்திய மகாவித்தியாலய மைதானத்தைச் சென்று அடைந்தனர்.அங்கு சென்ற குழுவினர் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிகாரிகளுடன் சுமார் அரை மணிநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் உள்ள படை நிலைகள் மற்றும் தீவின் ஏனைய பகுதிகளையும் குழுவினர் சுற்றிப் பார்வையிட்டனர்.

இதன் பின்னர் அமைச்சர் மிலிந்த மொற கொட தலைமையிலான குழுவினர் பொது மக்களுடன் கலந்துரையாடினர்.இதன் போது நெடுந்தீவில் இருந்து கடற்படையினரை முற்றாக அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும்,கடற் படையினரால் மீனவர்கள் தாக்கப்படுவதை நிறுத்தவும்,மீனவர்கள் கடற் படையினரால் எதிர்நோக்கும் அசௌகரியங்களை தடுத்து நிறுத்தவும் ஆவன செய்வதாக அமைச்சர் மிலிந்த மொற கொட அங்கு கூடிநின்ற சுமார் ஆயிரக் கணக்கான பொது மக்களிடம் உறுதிபடத் தெரிவித்தார்.சுமார் அரை மணிநேரம் பொது மக்களுடனான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினர் பி.ப. 2.30மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் அங்கிருந்து புறப் பட்டுச் சென்றனர் குடாநாட்டுக்கு வருகை தந்த இக் குழுவினருக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. (த-48)

## சமாதான...

சமாதானத் தீபத்தை ஏற்றிவைக்க யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தின் தலைவர் க.நாகராசா தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்குகொள்வதற்கென வடமராட்சி,தீவகம்,வலிகாமம் மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் இருந்தும் பொது மக்கள் வருகை தந்திருந்தனர்.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில் உண்ணாவிரதிகளுக்கு குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தினை முடித்து வைத்தார். (த-77,43,7,4)

அன்பு வாசகர்களே!
இன்று உங்களின்
சஞ்சீவனம்
விஷேட அரசியல்
கட்டுரையுடன்
விலை ரூபா 12/-

## புலிகள்.....

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் மற்றோர் அணி சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து கடற் படையினரைச் சுற்றிவளைத்து நிற்பதாக மற்றோர் தகவல் தெரிவிக்கின்றது.

இரு சாராருக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இவ்விடயத்தில் தலையிட்டு சமரசம் செய்ய முற்பட்டபோதும் அவர்களது சமரசத்தை கடற் படையினர் மறுத்திருப்பதாகவும், அதேவேளை எங்கள் பகுதியில் இருந்து கடற் படை வெளியேற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதுடன்,எங்களைக் கைதுசெய்தால் பெரும் விபரீதம் ஏற்படும் என எச்சரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின்10ம் திருவிழாவான இன்று மஞ்சத்தில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். தேர்த்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதியும் ,தீர்த்தத் திருவிழா 2ம் திகதியும் நடைபெறும். (த-5)

## அரசு-புலிகள்...

காணப்பட்டபின் போர்நிறுத்தத்தை தொடரும் விவகாரங்களில் அதிக கவனம் செலுத்த முடியும் என்று கண்காணிப்புக் குழு நம்புகிறது.

மீறல் தொடர்பான பிரச்சினைகள் பற்றி பேசித்தீர்மானிக்கப்பட்டுவிடுமாயின் இருக்கக் கூடிய ஏனைய அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி விரிவான கவனம் செலுத்த வாய்ப்பு ஏற்படும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன. (த)

## மீண்டும் யுத்தம்...

இலங்கை அரசு தமிழீழ விடுதலைப புலிகளுடன் மேற் கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு சுவீடன் அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் கூறினார். (வ)

பொது நலவாய நாடுகளின்

# பத்திரிகையாளர் சங்க மாநாடு நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

பொது நலவாய நாடுகளின் பத்திரிகையாளர் சங்கத்தின் ஒருவாரகால மாநாடு கொழும்பிலும் கண்டியிலும் ஊடகத் துறை அமைச்சரினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது .

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் அனுசரணையுடன் நடைபெறும் இம் மாநாட்டின் பிரதான மாநாடு செவ்வாய் அன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் ஆரம்பித்து வைக்கப் படும். மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வுகளை கொழும்பிலுள்ள ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் பொது நலவாய நாடுகளின் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் டொன்மக்கினோன் தொடக்கிவைப்பார். மாநாட்டில் ''இலங்கையின் சமாதான நடவடிக்கைகள்'' எனும் தலைப்பில் பேராசிரியர் ஜீ.எல்.பீரீஸ் உரை நிகழ்த்துவார். ''பயங்கரவாதத்திற்கு எதிரான போர்'' எனும தலைப்பில் லக்ஸ்மன் கதிர்காமர் உரையாற்றுவார்.இத்தலைப்பில் ரைம்ஸ் ஒப் இந்தியாவின் திலிப்பொட்-தோன்கார், பாகிஸ்தான் டோன் குறூப்பை சேர்ந்த பிரதம நிர்வாகி ஹமீத் ஹரோனும் உரை நிகழ்த்துவர். (த)

உடன் தேவை


* பத்திரிகை விநியோகஸ்தர்கள்

பத்திரிகை விநியோகிப்பதற்கு சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்

வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

-ஆளணி முகாமையாளர்-

மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



காலத்தின் கோலத்தினால் ஏற்பட்ட அழிவினை மாற்றி புத்துயிர் கொடுக்க அல்லும் பகலும் அயராது உழைத்து கிராம அலுவலர் தரம் 1இற்கு பதவி உயர்வு பெற்ற

திரு . கி. மகாலிங்கம் (J.P)

(கிராம அலுவலர்-J/83- கொட்டடி)

அவர்களை மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

கொட்டடி, யாழ்ப்பாணம். கொட்டடி கிராம அபிவிருத்திச்சங்கமும் (J/83) கொட்டடி வாழ்மக்களும. (6567)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்24.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.